# திருக்கோயில்



நவம்பர்
1999

விலை
ரூபாய் ஐந்து



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் உலகமக்களின் நன்மையை முன்னிட்டு 24.10.99 அன்று அருட்செல்வர், தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்களின் முன்னிலையில் கோடிதீபம் ஏற்றும் துவக்கவிழா நடைபெற்றது. இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் முதல் விளக்கினை ஏற்றி வைத்து இவ்விழாவைத் துவக்கி வைத்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., திருக்கோயிலின் அறங் காவலர் குழுத்தலைவர், திருப்பணிச் செம்மல் திருமிகு டெக்கான் என்.கே. மூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்கள், திரளான பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.

# திருக்கோயில்

திங்கள் இதழ்





| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு கார்த்திகை<br>நவம்பர் 1999 | மணி 11 |



சிறப்பாசிரியர்

திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

திருச்செந்தூர் அருள்மிகு
சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

## பொருளடக்கம்


*நூறுகோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களை மீட்டோம்*
- மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள்

*கந்தர் சஷ்டி விழா*
- சுகவனேஸ்வர், இ.ஆ.ப. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்

*கைலாஷ் மானசரோவர் யாத்திரை - வீடியோ கேசெட் மதிப்புரை*
- முனைவர் த. அமிர்தலிங்கம்

*தனம் தரும் கல்வி தரும் திருவிளக்கு வழிபாடு*
- தவத்திரு துர்க்கைச் சித்தர்

*திருவண்ணாமலையில் தெய்வீகச் சூழலில் தீபக்காட்சி*
- பெரும்புலவர் அ. பாண்டுரங்கனார்

*ஸ்ரீ கேதார கௌரி விரதம்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

*ஸ்ரீ மணவாள மாமுனிகள்*
- ப. முகுந்தன்

*அருளாளப்பெருமாள் எம்பெருமானார்*
- திருமதி கோமதி ராகவன். எஃப்.சி.ஏ.

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*கந்தர் சஷ்டி விரதம்*
- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

*வினாவும் விடையும் (பொதுவானவை)*
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# சென்னையில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள கோவில் நிலங்களை மீட்டோம்

– மாண்புமிகு அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள்

நமது அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள திரு வட்டீஸ்வரர் கோவில் பழமை வாய்ந்த, பிரசித்தி பெற்ற கோவில் ஆகும். இந்தக் கோவிலுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை ராயப்பேட்டையில் 220 கிரவுண்டு மனைகள் உள்ளன.

இந்த சொத்துக்களை 29 வருடங்களாகப் பலர் ஆக்கிரமித்து இருந்தனர். இந்த 220 கிரவுண்டில் ராயப்பேட்டையில் உள்ள உட்லண்ட்ஸ் சினிமா தியேட்டர் மற்றும் அதையொட்டி உள்ள ஓட்டலும் அடங்கும். இதே போன்று 220 கிரவுண்டு நிலத்தில் பலர் கடைகள், வீடுகளைக் கட்டி அவற்றைத் தங்கள் சொத்தாக எண்ணி அனுபவித்துவந்தனர்.

### பட்டா போட்டுக்கொண்டனர்

கடந்த 1971-ஆம் ஆண்டு இந்த 220 கிரவுண்டு நிலத்தையும் ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் பெயருக்கே பட்டா போட்டுக் கொண்டனர். அறநிலையத் துறைக்கு திருப்பித் தரும்படி பல்வேறு முறை தெரிவித்தும் தரவில்லை. இதைத் தொடர்ந்து கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதன் விளைவாக 29 ஆண்டுகளுக்குப் பிறகு 220 கிரவுண்டு மனைகளின் பட்டாக்களும் கோவில் பெயருக்கு மாற்றப்பட்டன.

220 கிரவுண்டு நிலத்தை 240 குடும்பத்தினர் ஆக்கிரமித்து இருந்தனர். இப்போது 100 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டு விட்டன. இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை எடுத்த பெரு முயற்சியால் இந்த நிலம் மீட்கப்பட்டுள்ளது.

### வாடகை நிர்ணயம்


அடுத்த கட்ட நடவடிக்கையாக அந்த 220 கிரவுண்டு மனைக்கும் அறநிலையத்துறை வாடகை நிர்ணயிக்கும். அந்த தொகையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேபோல் சென்னை ராயப்பேட்டை காளிங்கராயன் தெருவில் செல்வ விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான 2400 சதுர அடி நிலத்தில் ஒருவர் 5 மாடி கட்டிடம் கட்டியுள்ளார். அவர் இந்த இடத்துக்கு ஆண்டுக்கு 2 ரூபாய்தான் வாடகை செலுத்தி வந்தார். இப்போது அந்த இடத்துக்கு 5 ஆயிரத்து 150 ரூபாய் வாடகை நிர்ணயம் செய்துள்ளோம். அவரும் அந்த வாடகையைக் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். இதேபோல் திண்டுக்கல்லில் கோவிலுக்குச் சொந்தமான கடைகள் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு அவர்கள் செலுத்தி வந்த குறைந்த வாடகைத் தொகையை உயர்த்தி நிர்ணயம் செய்துள்ளோம்.

### கோவிலில் பெயர் பட்டியல்

திருச்சி திரவுபதி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான 798 சதுர அடி நிலத்தை ஒருவர் ஆக்கிரமித்திருந்தார். கோவிலுக்கு 27 ரூபாய் மட்டும் வாடகையாக செலுத்தி வந்தார். அதையும் நாங்கள் மீட்டுள்ளோம். இதேபோல் தமிழ்நாடு முழுவதும் ஆக்கிரமிப்பாளர்கள் வைத்திருந்த கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்தவர்கள் முறையாக பணம் செலுத்தாமல் இருந்தனர். குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள் பெயரை பட்டியல் போட்டு கோவில்களில் வைத்தோம். இதன் பின் பாக்கித்தொகை விரைவாக வசூலாகி வருகிறது. இதேபோல் ஆக்கிரமிப்பாளர் பெயர்களையும் பட்டிய



சென்னை அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் நம் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் 16.9.99 அன்று 76 இணைகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைத்தார்கள். அம்மண மக்களை இப்படத்தில் காணலாம்.

லிட்டுக் கோவில்களில் பக்தர்கள் பார்வைக்கு வைக்கும் படி உத்தரவிட்டுள்ளோம்.

## ரூ. 40 கோடி கூடுதல் வருமானம்

கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய சொத்துப் பதிவேடுகள் முறையாக வைக்கப்படாமல் இருந்தது. நமது ஆட்சி பொறுப்பேற்றபின் அவை முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 1,802 கோவில்களுக்கான சொத்துப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் மீதமுள்ள கோவில்களின் நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு சொத்துப்பதிவேடுகள் தயாரித்து பாதுகாப்பாக வைக்கப்படும்.

நமது அரசு கோவில் நிலங்களைப் பராமரித்து குத்தகை மற்றும் வாடகை பாக்கிகளை வசூலிக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் பயனாய் அரசுக்கு ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் கூடுதலாக வருமானம் கிடைக்கும்.

## கல்வெட்டு போடப்படும்

ஆண்டுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோவில்கள் 110 உள்ளன. இந்தக் கோவில்களின் சொத்துக்களை பாதுகாக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதன் படி, இந்தக் கோவில்களுக்குச் சொந்தமான மொத்தநிலங்களின் விவரம் கல்வெட்டுகளில் கோவில்களில் பதிக்கப்படும். இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

கோவில்களுக்குச் சொந்தமான விவசாய நில வாடகைப் பாக்கியை வசூலிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குத்தகை பாக்கிதாரர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளன. வருவாய் நீதி மன்றங்கள் மூலம் விரைவில் தீர்வு காணப்படும்.

★★★

# கந்தர் சஷ்டி விழா

– சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

சிறப்புமிக்க கடலலைகள் செவ்வேள் பரமன் திருவடிகளை வந்து எந்தநேரமும் வருடியவாறு விளங்கும் திருத்தலம் திருச்சீரலைவாய்த் திருத்தலம் ஆகும்.

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்''

என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் போற்றும் ஒப்பற்ற திருத்தலமும் இதுவே ஆகும்.

''தாழ்நீள் வெண்டலைப் புணரி அலைக்கும்
செந்தில்'' என்று புறநானூறும்
''சீர்கெழு செந்தில்''

எனச் சிலப்பதிகாரமும் போற்றியிருப்பது கொண்டு, முருகப்பெருமானின் இரண்டாம் படைவீடு எனப் போற்றப்படும் திருச்செந்தூர் திருத்தலத்தின் பழமையை நாம் உணரலாம்.

கந்தபுராண வரலாறு நடைபெற்ற கிருதயுகத்திலேயே முருகப் பெருமான் சூரபதுமனை வெல்வதற்காக வந்து பாசறை அமைத்துத் தங்கிய சிறப்புடையது திருச்செந்தூர் என்பதால் இத்தலத்தின் பழமையையும், பெருமையையும் ஒருவாறு நாம் உய்த்துணரலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அப்பரடிகள்

''நம் செந்தில் மேய வள்ளி மணாளற்குத்
தாதை கண்டாய்''

என்று முருகப்பெருமானை உரிமையுடன் உவந்து போற்றியுள்ளார்.

நம் தமிழ்நாடும், தமிழ்மொழியும், தமிழ் மக்களும் அன்று தொட்டு இன்று வரை கொண்டாடிப் போற்றிவரும் ஒப்பற்ற திருத்தலமாய் விளங்கும் திருச்செந்தூருக்கு ஜெயந்திபுரம், கந்தமாதனம், காந்தமலை முதலான பல பெயர்களும் உண்டு.

திருக்கயிலையும், திருச்செந்திலும் வேறுவேறு இல்லை என்பதை அருணகிரிநாத சுவாமிகள்

''கயிலை மலையனைய செந்திற்பதி வாழ்வே''

என்று திருப்புகழில் சுட்டியிருக்கக் காணுகின்றோம்.

''செஞ்சொல் புலவர்க்கு அன்புற்ற திருச்செந்தில்'' என்று அருணகிரிநாத சுவாமிகள் குறிப்பிடுவது போல சமயப்பெரியோர்களும், தமிழ்ச் சான்றோர்களும் திருச்செந்தில் ஆண்டவரை அளவிலாத காவியங்களும், பாடல்களும் பாடிப் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

அருணகிரிநாதர் திருச்செந்தூர் முருகனைப் பாடித் திருவடி தீட்சை பெற்றுள்ளார்; அவர் திருச்செந்தூர் முருகன் மேல் 83 திருப்புகழ்களைப் பாடிப் போற்றியுள்ளார்.


ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்த குமர குருபரர் திருச்செந்தில் முருகன் அருளால் பேசும் அருளைப் பெற்றார் என்பதும், அவருடைய முதற்பேச்சே கந்தர் கலி வெண்பாவாக மலர்ந்தது என்பதும் வரலாறு.

வைணவராக இருந்த பகழிக் கூத்தர் ''திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்'' பாடி வயிற்றுவலி நீங்கியது பிரசித்தம்.

பாம்பன் சுவாமிகள் 'பஞ்சாமிர்த வண்ணம்' பாட செந்திலாண்டவனே உவந்து அதைக் கேட்டு இன்புற்று ''பஞ்சாமிர்த வண்ணம் பாடப்படும் இடத்தில் யாம் இருப்போம்'' என்று கூறி மறைந்த வரலாறும் ஒரு அற்புதமான வரலாறு ஆகும்.

வென்றிமாலைக் கவிராயர், சுவாமிநாத தேசிகர், சிற்றம்பல நாடிகள், அண்ணாமலை ரெட்டியார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், கந்தசாமிப்புலவர், தேவராய சுவாமிகள் என திருச்செந்தில் ஆண்டவரைப் பாடியுள்ள அருளாளர்களின் வரலாறுகள் யாவும் அதிஅற்புதமான வரலாறுகள் ஆகும்.

முருகப் பெருமானின் திருத்தலங்கள் பலவும் மலைமேலிருக்கத் திருச்செந்தூர் திருத்தலம் கடற்கரையில் அமைந்து பெருமைபெற்று விளங்குகின்றது.



இதற்கான காரணத்தையும் நம் அருளாளப் பெருமக்கள் நயம்பட விளக்கியுள்ளமை இங்கு நாம் உணர்ந்து இன்புறத்தக்க ஒன்றாகும்.

சிவபெருமான் கருணைக்கடல். அக்கடலினின்று அடிக்கும் அலை, கரையில் முருகனாக நிற்கின்றது என்கிறார் அருணகிரிநாதர்.

''திங்கள் அரவு நதி சூடிய பரமர்
தந்த குமர அலையே''

என்பது அவர்தம் திருப்புகழ்.

ஆதிசங்கரர் தாம் அருளியுள்ள சுப்பிரமணிய புஜங்கத்தில் தம் அடியார்களைப் பிறவியாகிய கடலிலிருந்து கரையேற்றிக் காக்கும் வண்ணம், கருணாமூர்த்தியான கந்தப் பெருமான் திருச்செந்தூரில் கடலோரம் கோயில் கொண்டு விளங்குவதாகக் கூறும் பாடல் நயமிக்கதாக அமைந்து விளங்குகின்றது.

''யதா ஸந்நிதானம் கதா மானவா மே
பாவம்போதி பாரம் கதாஸ்தே ததைவ
இதி வ்யஞ்ஜயன் ஸிந்துதீரேய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம்''

ஆதிசங்கரரின் மேற்காணும் சமஸ்கிருதப் பாடலையும் பிற பாடல்களையும் பொருள் மாற்றமின்றி இனிய நயமிக்கத் தமிழ்க் கவிதையாக மொழிமாற்றம் செய்துள்ளார் தமிழ்க் கவிஞர் ஒருவர். தமிழாக்கப் பாடல் பின்வருமாறு:

''என் முன்னர் வந்தோர் பிறப்பென்ற வேலை
யினை ஏறி னாரென்று நிலமேல் விளங்கித்
துன்னும் கடற் செந்தில் உறைகின்ற தூயோன்
துங்க பராசக்தி அருள்சேயை நினைவாம்''

கடலின் அலைகள் ஆரவாரத்துடன் கரைவரை வந்து கரைந்து போவதைப் போல், கடற்கரையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பூசிப்பவர் பாவங்களும் துன்பங்களும் கரைந்து தீர்ந்து போகும் எனவும் ஆதிசங்கரர் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தில் பாடியுள்ள சமஸ்கிருதப் பாடலைக் கீழே காணலாம்.

''யதாப்தே ஸ்தரங்காலயம் யாந்தி துங்கா:
ததை வாபத: ஸந்நிதௌ ஸேவதாம் மே
இதீவோர்மிபங்க்தீ: ந்ருணாம் தர்சயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்''

இதன் அழகிய தமிழாக்கப் பாடலையும் பின்வருமாறு படித்து இன்புறலாம்.

''திரைபொன்றுமா போலே வினை ஒன்றும் இன்றே
திருமுன்பு வம்மின்கள் எனநின்றவன் போல்
திரைபந்தியாய் வந்து கரைகின்ற செந்திற்
சேயோனை இதயத்தில் வைத்துளேனே''

திருச்செந்தூர் முருகனின் இலை விபூதிப் பிரசாதம் வலிப்பு, காசநோய், குட்டம் முதலான கொடிய நோய்களைப் போக்கவும், பேய், பூதம் முதலானவைகளை விரட்டவும் வல்லது என்கிறார் நம் ஸ்ரீ ஆதிசங்கரர்.

''அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச : ப்ரமேஹ
ஜ்வரோந்மாத குல்மாதி ரோகா மஹாந்த:

பிசாசாச்ச ஸர்வே பவத்பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ர வந்தே''

*இதன் அழகிய தமிழாக்கப் பாடல் பின்வருமாறு:*

''கண்டால் நின் இலை நீறு கைகால் வலிப்புக்
காசம் கயம் குட்டம் முதலாய நோயும்
விண்டோடுமே பூதபைசாசம் யாவும்
வினையாவுமே செந்தில் அமர் தேவதேவே''

*இத்தகைய அருமையான 33 சுலோகங்கள் ஸ்ரீசுப்பிரமணிய புஜங்கத்தில் அமைந்து விளங்குகின்றன. இவற்றைப் பாடித் துதிப்பவர்க்குச் சகலவிதமான நன்மைகளும் எளிதில் கைகூடிவிடும் என்பது கண்கூடு.*

*நூலின் இறுதியில் அமைந்து விளங்கும் இரு சுலோகங்களும் அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு:*

''நம கேகிநே சக்தயே சாபி துப்யம்
நம சாக துப்யம் நம குக்குடாய
நம ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
நம ஸ்கந்த மூர்தே நமேஸ்தே நமோஸ்து''
(சு.பு. 31)

''மயில் போற்றி வேல் போற்றி மறியாடு போற்றி
வன்கால்படைச் சேவலும் போற்றி நந்தூர்
உயர் வெண்திரை சிந்து போற்றி முருகேசன்
உபயபதம் போற்றி உரைசெந்தில் போற்றியே''

''ஜயாநந்தபூமந் ஜயாபாரதாமந்
ஜயாமோக கீர்தே ஜயாநந்தமூர்தே
ஜயா நந்த ஸிந்தோ ஜயாசேஷபந்தோ
ஜய த்வம் ஸதா முக்திதாநேச ஸூநோ''
(சு.பு. 32)

''ஜய இன்பவடிவ, ஜய ஜோதி
ஜய பாவுபுகழோய், ஜய தாவில் இன்போய்
ஜய இன்பசிந்து, ஜய சர்வபந்து
ஜய இன்பவள்ளால், ஜய செந்தில் வாழ்வே''

திருச்செந்தூரில் பாசறை அமைத்து சூரசம்ஹாரம் புரிந்த முருகப்பெருமான், திருச்செந்தூரில் தேவதச்சனைக் கொண்டு கோயில் அமைத்துத் தம் தந்தை சிவபெருமானையும் வரவழைத்துத் தாமே அவருக்குப் பூசனை புரிந்தார்.

சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் செய்து, மணி, விளக்கு, தூபம், மலர்கள் முதலியவற்றைத் தேவர்கள் எடுத்துத் தந்திட ஆகம முறைப்படி அகம்நிறை காதலால் முருகப்பெருமானே வழிபாடு செய்த சிறப்புடையது திருச்செந்தூர் திருக்கோயிலாகும்.

சிவபெருமான் மேல் முருகப் பெருமான் மலர்களை இட்டு அருச்சனை செய்தபோது, மனமுருகிய திருமால், பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் பக்திப் பரவசத்துடன் ''முருகா முருகா'' என்று உருகிட, கையில் எடுத்த மலருடன் திரும்பி முருகப்பெருமான் தேவர்களுக்குக் காட்சி வழங்கிய நிலையிலேயே இன்றும் திருச்செந்தூரில் மூலவரைத் தரிசித்து நாம் இன்புறலாம்.

இன்றும் முருகப்பெருமானுக்குத் தீபாராதனை நடைபெற்ற பிறகு, போற்றிமார் இவருக்குப் பின்புறமுள்ள சிவலிங்கத்திற்குத் தீபாராதனை காட்டக் காணலாம். முருகப்பெருமான் தம் தந்தை சிவபெருமானை இன்றும் வழிபட்டு வருவதான ஐதீகம் இத்திருக் கோயிலில் கடைப்பிடிக்கப்பட்டு வரக் காணுகின்றோம்.

மூலவருக்குப் பின்புறம் பஞ்சலிங்க மூர்த்திகள் உள்ளனர். இப்பஞ்சலிங்க மூர்த்திகளைப் பிரம்ம முகூர்த்தத்தில் முப்பது முக்கோடி தேவர்களும் வழிபடுவதாக ஐதீகம் உள்ளது.

திருச்செந்தூரில் முருகப்பெருமானுக்கு நாள் தோறும் ஒன்பது காலப்பூசைகள் நடைபெற்று வருகின்றது. இதில் அதிகாலையில் உபநிடத மந்திரங்களுடன் நடக்கும் விசுபரூப தரிசனம் மிக விசேடமானதாகும்.

முருகப்பெருமான் அசுரனாகிய சூரபதுமனுக்குப் போர்க்களத்தில் விசுவரூபதரிசனம் வழங்கியதைக் கந்தபுராணம் விவரித்துக் கூறுகின்றது.

முருகப்பெருமான் விசுவரூபம் எடுத்தபோது சூரபதுமன் தான் ஆட்சிபுரிந்த ஆயிரத்தெட்டு அண்டங்களும் அவருடைய உரோமத்தில் ஒரு சிறு பனித்துளி போல் ஒட்டியிருக்கக் கண்டு அப்பொழுதே தன் ஆணவம் முழுவதும் அடங்கினான் என்பதைக் கந்தபுராணம் தெளிவுபடுத்துகின்றது.

''கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என் றிருந்தேன் அந்நாள்
பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணனாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ''

''மீயுயர் வடிவம் கொண்டு
மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா
மற்றுயான் பெற்ற அண்டம்

ஆயவை முழுதும் மற்றும்
அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பத ரோமத்தில்
தோன்றியே நிற்கும் அன்றே''

முருகப்பெருமானின் விசுவரூப தரிசனம் காண, உடம்பெல்லாம் கண்களைக் கொண்டவர்க்கும் அனந்த கோடி கற்பகாலம் தேவைப்படும்; முருகன் அருளால் யான் காணப் பெற்ற பேறினை என்னென்று போற்று வேன்'' என்று கூறி ஆணவம் அழிந்தான் சூரபதுமன் என்பதைக் கந்தபுராணம் கூறுகின்றது. அத்தகைய விசுவ ரூப தரிசனத்தைத் திருச்செந்தூரில் ஒவ்வொரு நாளும், காலை 5.30 மணிக்குக் கண்டு இன்புறலாம்.

பொதுவாக தெய்வங்கள் அசுரர்களை அழிப்பது தான் வரலாறு. எனினும் அதற்கு மாறாக முருகப்பெருமா னின் கருணையை எடுத்துக்காட்டுவதாக சூரபதுமனின் ஆண வம் அகற்றி, தீமையே புரிந்த அவ்வரக்கனையும் மயில் வாகனமாகவும், சேவற் கொடியாகவும் கொண்டு அருள் புரிந்த அற்புத வரலாறே ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி வளர்பிறை முதல் ஆறு நாட்களில் திருச்செந்தூ ரில் கந்தர் சஷ்டி விழாவாகக் கொண்டாடப்பட்டு வரு கின்றது.

சூரபதுமனின் ஒரு பாதி ''நான்'' என்கின்ற அகங் காரம். மற்றொரு பாதி ''எனது'' என்கின்ற மமகாரம். முருகப்பெருமானின் விசுவரூப தரிசனத்தால் ஞானம் உண்டானபோது அவை ஒடுங்கி மயிலும், சேவலும் ஆயின.

முருகப்பெருமான் தம் திருவருள் நோக்கத்தி னால் சூரனின் பகைமையை நீக்கி, அவன் பாவங்களை யும் போக்கித் தீயவன் ஆன சூரபதுமனுக்கும் திருவருள் புரிந்து மயிலைத் தம் வாகனமாகவும், சேவலைத் தம் கொடியாகவும் கொண்டருள் புரிந்த பெருமைமிகு விழாவே கந்தர் சஷ்டி விழாவாகும்.

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ
அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

என்று முருகப் பெருமானின் தண்ணளியைப் போற்றிப் புகழ்கின்றது கந்தபுராணம்.

ஐப்பசிமாதம் வளர்பிறையில் முதல் ஆறுநாட் களும் தேவர்கள், முனிவர்கள் உள்ளிட்ட யாவரும் கந்தர் சஷ்டி விழாவினை விரதமிருந்து கொண்டாடிப் போற்றி னர் என்பதையும் கந்தபுராணம்

''வெற்பொடும் அவுணன் தன்னை
வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றார்''

என்று பாடி விளக்கியிருக்கவும் காணுகின்றோம்.

முருகப்பெருமானுக்குரிய வாரவிரதங்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை விரதம். மாத விரதங்களில் சிறந்தது கிருத்திகை விரதம். ஆண்டு விரதங்களில் சிறந்தது மகா கந்தர் சஷ்டி விரதம் என்பதைக் கந்த புராணம் கந்த விரதப் படலத்தில் விவரிக்கின்றது.

வசிட்ட முனிவர் இவ்விரத மகிமைகளை விவ ரிக்கக் கேட்ட முசுகுந்தன், இவ்விரதங்கள் யாவற்றையும் கடைப்பிடித்து, முருகப்பெருமானை மயில்வாகன மூர்த்தியாகத் தரிசிக்கும் பேறு பெற்றதோடு வீரபாகு முதலிய நவவீரர்களைத் தன் துணைவர்களாகவும் வரம் பெற்றதாகக் கந்தவிரதப் படலம் கூறுகின்றது.

முருகப்பெருமானின் ஒன்பது தம்பியரில் முதல் வர் வீரபாகு. நவசக்திகளில் மாணிக்க வல்லியிடத்துத் தோன்றியவர். இவரே சயந்தனைச் சிறையிலிருந்து விடு வித்துச் சரவண பவனைச் சரண் அடைந்து உய்யுமாறு சூரபதுமன் பால் தூது சென்று அறிவுறுத்தியவர். சூர பதுமனின் வீரமகனான பானுகோபனை வதைத்த மாவீரர்.

பானுகோபனை வதைத்த வெற்றிக்குப் பரிசாக பிரம்மபதவி, குபேர பதவி, இந்திர பதவி வேண்டுமா என முருகப்பெருமான் கேட்டபோது எளிய அப்பதவிகளை வேண்டாது மறுத்து, என்றும் முருகப்பெருமானின் திரு வடிப் பதமே வேண்டும் எனக் கேட்டுப் பெற்ற ஒப்பில் லாதவர் வீரபாகு ஆவார்.

''கோலம் நீடிய நீதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சாலநின் பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்''

என்று வேண்டி முருகப் பெருமானின் திருவடிப் பதம் பெற்றவர் வீரபாகு. அவரைத் தம் துணைவராகக் கந்தர் சஷ்டி விரதத்தால் பெற்றார் முசுகுந்தர் என்றால் கந்தர் சஷ்டி விரதத்தின் சிறப்பினை என்னென்று போற்றுவது?

திருச்செந்தூர் திருக்கோயில் வழிபடும் மெய்யன் பர்கள் மூலவருக்கு முன்புறமுள்ள மணியடி வாயிலின் வலப்புறம் நிற்கும் வீரபாகு தேவரை வழிபட்டு மகிழ லாம். அதே மணியடி வாயிலின் இடப்புறம் நிற்பவர் வீரபாகு தேவரின் தம்பியரில் ஒருவரான வீரமகேந்திரர் ஆவார்.

விரதங்களில் சிறந்த கந்தர் சஷ்டி விரதம் இருந்தால், குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும் என்பதை உணர்த்தும் வகையில் ''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்ற பழமொழி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

சட்டியில் இருந்தால் - சஷ்டியில் விரதம் இருந்தால்
அகப்பையில் வரும் - அகமாகிய வயிற்றின்கண் உள்ள
கருப்பையில் மகப்பேறு
வாய்க்கும்.

இவ்வாறு விளக்கம் அளித்துக் கந்தர் சஷ்டி விரத மகிமையை அமரர் கிருபானந்த வாரியார் சுவாமிகள் விளக்கியிருப்பதும் இங்கு எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்.

சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தில் கந்தனை நோக்கி விரதம் இருந்து வழிபட்ட காரணத்தால் நாகன் - தத்தை ஆகிய வேடுவத் தம்பதியருக்குக் கண்ணப்பர் பிறந்தார் எனப் பாடியுள்ள கருத்தும் இங்கு நாம் நினைந்து மகிழத்தக்க ஒன்றாகும்.

''பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர் பேறே
அரியது என்று எவரும் கூற
அதற்படு காதலாலே
முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்'' (பெ.பு. 660)

''வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேர்அணங்கு ஆடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை'' (பெ.பு. 661)

''பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற
எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற வூர்தி
வரையுரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளினாலே (பெ.பு. 662)

''கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பன்'' என ஞாலம் போற்றும் திண்ணன் எனும் குழந்தை பிறந்தது என்று பெரிய புராணம் கூறக் காணுகின்றோம்.

குற்றாலக் குறவஞ்சி எனும் வேடுவர் வாழ்வினை விவரிப்பதான சிற்றிலக்கியத்திலும், கந்தர் சஷ்டி விழாவைப் பற்றிய கருத்து இடம் பெற்றிருப்பது கொண்டு இவ்விழாவின் மகத்துவத்தை நாம் நன்கு அறியலாம்.

''குறத்தியை மணங்கொண்ட செவ்வேள் குறவன் முதல் வேட்டைக்குச் செல்ல ஆறுநாட்கள் கழித்து அவனுக்கு ஒரு கொக்கு (மாமரம்) அகப்பட்டது. அக்கொக்கை அவித்து ஒரு சட்டியில் (சஷ்டியில்) சாறு (விழா) வைத்தான். அச்சாறு (விழா) வேதப்பிராமணர், முனிவர், அமரர் ஆகிய யாவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாயிற்று என்று குற்றாலக் குறவஞ்சி நயம்பட உரைக்கும் பாடற்பகுதி பின்வருமாறு:

''மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்
வேள் குறவன் முதல்வேட்டைக்குப் போன நாள்
ஆறு நாட் கூடி ஒரு கொக்குப் பட்டது.
அகப்பட்ட கொக்கை அவித்து ஒரு சட்டியில்
சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமுங் கொண்டார், சைவர் தாமுங்
கொண்டார், தவப்
பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார்''

என குற்றாலக் குறவஞ்சி கூறியிருப்பதுபோல் இன்றும் வேதப்பிராமணர், முனிவர், சைவர் உள்ளிட்ட யாவரும் ஏற்றுக் கொண்டாடும் ஒரு பெரும் விழாவாகக் கந்தர் சஷ்டி விழா கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினார்க்கோர்
வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே

என்று தாயுமான சுவாமிகள் பாடியிருப்பது போல முருகனே தம் கைவேலால் உண்டாக்கிய நாழிக்கிணறு எனும் அற்புதத் தீர்த்தமும், வதனாரம்ப தீர்த்தமும் இங்கு மிகச் சிறப்பான தீர்த்தங்கள். வியாழ பகவானே முன்னின்று முருகப்பெருமானுக்கு அசுரர் வரலாறு கூறிய திருத்தலம் ஆதலால் குருவருளாலும் சிறப்புற்ற திருத்தலம் திருச்செந்தூர்.

ஓங்காரத்திற்குப் பொருள் உரைத்த முருகப்பெருமானே சற்குருவாகப் பொலிந்து சகல நலன்களும் வாரி வழங்கும் திருத்தலம் திருச்செந்தூர் திருத்தலம். முருகப்பெருமானின் இராஜதானி திருச்செந்தூர்; இங்கு வந்து முருகப்பெருமானைத் தரிசிப்போர் எமபயம் நீங்கி, மோட்ச வீடு பெற்று இன்புறுவர் என்பது திண்ணமாகும்.

''ஆறிரு தடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

# ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரை''
# - வீடியோ கேசெட் மதிப்புரை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

வெளியீடு : ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

விலை : ரூ. 300

தபாலில் பெற கூடுதல் செலவு : ரூ. 40

சுவாமி கமலாத்மானந்தர் தலைமையில் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் பக்தர்கள் இருபதுபேர் அண்மையில் ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரை'' சென்று வந்துள்ளனர்.

தமிழிலக்கியத்தில் ''ஆற்றுப்படை'' எனும் தலை சிறந்த இலக்கிய வகை சங்ககாலம் தொட்டு இருந்து வருகின்றது.

முருகன் அருள் பெற்ற மெய்யடியார் ஒருவர், முருகன் அருளைப் பெற விழையும் மற்ற மெய்யடியார்களுக்கு முருகனின் திருத்தல மகிமையை விளக்குவதாக அமைந்த ''திருமுருகாற்றுப்படை'' இலக்கியமே தமிழில் தோன்றியுள்ள முதல் ஆற்றுப்படை இலக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திருமுருகாற்றுப்படை இலக்கியத்தைச் சங்கப்புலவர் நக்கீரர் பாடியருளியுள்ளார்.

அவ்வாறே இவ்விருபதாம் நூற்றாண்டில் இராமகிருஷ்ண மடத்தில் கடந்த 32 ஆண்டுகளாக சந்நியாசியாகவும், ''இராமகிருஷ்ண விஜயம்'' இதழின் ஆசிரியராகவும் கடந்த 23 ஆண்டுகளாக மிகச்சிறந்த சேவையினை ஆற்றிவரும் சுவாமி கமலாத்மானந்தர் அவர்கள் இனிய செந்தமிழ் உரைவிளக்கத்துடன் முதன்முதலாக ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரையை'' வீடியோ கேசெட்டாக வழங்கித் திருக்கயிலாய யாத்திரை மேற்கொள்ள விழையும் மெய்யன்பர்களுக்கு மகத்தான தொண்டினைப் புரிந்து இருப்பது போற்றுதலுக்கு உரியது.

சிவனடியார்களுக்கு இக் ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரை'' ஒப்பற்ற பொக்கிஷமாக விளங்கும் என்பது திண்ணம்.

''பொன்னின் வெண்திரு நீறு புனைந்து எனப்
பன்னும் நீள் பனி மால் வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவுஅரியான் என்றும்
மன்னிவாழ் கயிலைத் திருமாமலை''

''அண்ணல் வீற்றிருக்கப் பெற்றது ஆதலின்
நண்ணும் மூன்று உலகும் நான்மறைகளும்
எண்இல் மாதவம் செய்ய, வந்துஎய்திய
புண்ணியம் திரண்டு உள்ளது போல்வது''

''மேன்மை நான்மறை நாதமும், விஞ்சையர்
கான வீணையின் ஓசையும், கார்எதிர்
தான மாக்கள் முழக்கமும், தாஇல் சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கு எலாம்''

என்று தெய்வச் சேக்கிழார் வருணிக்கும் தெய்வக் கயிலையை நேரில் காண, நமக்கு வழிகாட்டுவதாக இக் ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரை'' வீடியோ கேசெட், கயிலாயத்தின் சிறப்பையும், சிவபக்தியின் மேன்மையையும் நமக்கு நம் கண் எதிரில் கொண்டு வந்து காட்டுவதாய் மிகநேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

சமய பேதம் இன்றி, ஆன்மீக உள்ளம் படைத்த அனைத்து மதமக்களும் கண்டு களிக்க வேண்டிய ஒப்பற்றது இவ் வீடியோ கேசெட்.

திருமலை செல்லும் வழி இது எனக் கைகாட்டிய எளிய விவசாயி ஒருவரின் காலில் வீழ்ந்து வணங்கினார் ஒப்பற்ற மகான் இராமானுஜர் என்பதை அருடைய வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

''இறுமாந் திருப்பன் கொலோ
ஈசன்பல் கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்
சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ''

எனக் கயிலாயக் காட்சி கண்ணுறுவதையே தம் வாழ்வின் பயனாகக் கொண்டு விளங்கிய திருநாவுக்கரசு சுவாமிகள் போன்ற அருளாளர் பெருமக்களும் அடிபணிந்து போற்றத்தக்கது இக் ''கைலாஷ் - மானசரோவர் யாத்திரை'' எனில் இதன் சிறப்பைப் போற்றிட எவ்வாறு ஆகும்?

சிவகதி விளைவிக்கும் இவ்வொப்பற்ற வீடியோ கேசெட்டினை வையகம் போற்றிப்பயன் கொள்ள வேண்டுகின்றோம்.

# தனம் தரும் – கல்வி தரும் திருவிளக்கு வழிபாடு

- ஸ்ரீ துர்க்கைச்சித்தர்

திருவிளக்கு வழிபாடு ஒரு சிறந்த வழிபாடு. மனிதனுடைய வாழ்வில் நல்லவைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு உதவி செய்யக்கூடிய வழிகள் பல இருக்கின்றன. அத்தகு வழிகளில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் வழிபாடு திருவிளக்கு வழிபாடு. ஒவ்வொரு இல்லத்திலும் காலையிலும் மாலையிலும் பூஜை அறைகளிலோ, இறைவனுடைய திருவுருவங்களின் முன்போ விளக்கு ஏற்றுவது என்பது நீண்ட நெடு நாட்களாக நம்முடைய வழக்கத்தில் இருந்து வருகின்றது, திருவிளக்கு வழிபாட்டை நம்முடைய பெரியவர்கள் எல்லாம் பன்னெடுங்காலமாக அவரவர் இல்லங்களில் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

திருவிளக்கு வழிபாடுகளுக்கு ஏற்ற நாட்களாக நம் முன்னவர்கள் ஏற்றுக் கொண்டு அந்த வழியில் போற்றி வழிபாடு செய்ய ஏற்ற நாட்களாக சொல்லப் படுவது செவ்வாய்க் கிழமையும் அதாவது மங்கள வாரமும், வெள்ளிக் கிழமையும், அதாவது சுக்கிர வாரமும் ஆகும். இவைகள் தலை சிறந்த நாட்களாக கருதப்பட்டு வந்தன. நல்லவைகளை நாடி வீட்டில் இருக்கும் நலன்களை மிகுதிப்படுத்திக் கொள்ளவும், சூழ்ந்து இருக்கக் கூடிய இருளில் இருந்தும், துக்கங்களில் இருந்தும் விடுபட்டு, நல்ல அருட் செல்வத்தோடு கூடிய பொருட் செல்வம் பெற்று, வாழ்வதற்கு ஏற்ற நாளாக பௌர்ணமியைக் கருதி, அந்தப் பூர்ணிமையில் திருவிளக்கு வழிபாடு செய்து கொண்டு வந்தார்கள். இருட்டு நாள் என்று சொல்லப்படும் அமாவாசை அன்று தேவியானவள் கண்ணுக்குத் தோன்றாமல் அரூபத் தாயாக விளங்குகின்றாள். இதை அகத்திய பெருமான் சொல்வார்கள்: ''அமாவாசை நாளான அரூபத் தாய்'' என்று. பூர்ணிமையில் நிறைவுற்று கண்ணுக்குத் தெளிவு படுமாப் போல் விளங்கக் கூடிய தாய், அமாவாசை அன்று அரூப வெளியிலே காட்சி தருகின்றாள். இதனால் நிறை நலன் தரக் கூடிய நாளான பூர்ணிமையில் திருவிளக்கு வழிபாடு நம்மவர்களால் செய்யப்பட்டு வந்தது. இந்தத் திருவிளக்கு வழிபாட்டை இல்லங்களில் தனித்தனியாகச் செய்து வந்ததை எல்லோரும் ஒன்றாகக் கூடி வழிபாடு செய்தால் மிகுந்த நலன் கிடைக்கும் என்று நம்முடைய முன்னோர்கள் ஒன்றாகக் கூடி, திருக்கோயில்களில் திருவிளக்கு வழிபாட்டை செய்து வந்தார்கள். இந்தத் திருவிளக்கு வழிபாட்டை தீப வழிபாடு என்றும் சொல்வார்கள். தீப மங்கள ஜோதியாக விளங்கக் கூடிய தாயை வழிபட்டு அவளிடம் இருந்து அளப்பரிய நலன்களை எல்லாம் பெற்று நம்முடைய பெரியவர்கள் எல்லாம் மகிழ்ந்து இருக்கின்றார்கள். நம்முடைய வீட்டுக்குள்ளே ஏற்றி வழிபாடு செய்யப் படும் திருவிளக்குப் பூஜையானது இல்லத்தின் இருளைப் போக்கி இல்லத்துக்குள்ளே சிறப்பான செய்திகளையும் நல்ல வாழ்க்கையையும் கொடுத்துக் குடும்பத்தவர்களை மகிழ்விக்கச் செய்து வருகின்றது.

ஆனால் எல்லோருமாக கூடி ஒரு பொது இடத்தில் அமர்ந்து கொண்டு கூடி வழிபாடு செய்கின்ற வழிபாட்டை கூட்டு வழிபாடு என்று சொல்வோம். இந்த கூட்டு வழிபாட்டு நெறியில் 54, 108 என்ற கணக்கிலும், ஆயிரத்தெட்டு, லக்ஷத்தெட்டு என்ற கணக்கில்கூட விளக்குகள் ஏற்றி வழிபாடு செய்வது சிறப்பான செயல்களாக இருந்து வருகிறது. பொது இடங்களில் தீப பூஜை செய்வதனால் கிடைக்கக் கூடிய திருவருளானது வெகுவாகப் பெருகி வாழ்வை வழங்கி வருகிறது.

முன்னாட்களிலே கோவிலில் நிரம்ப தீபங்களை கோயிலைச் சுற்றி ஏற்றி சிறப்பு வழிபாடு செய்வார்கள். அந்த வழிபாட்டை லட்ச தீபங்கள் என்றும், அகண்ட தீபங்கள் என்றும் நம் பெரியவர்கள் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பௌர்ணமி அன்று சிவனும் சிவையுமாக விளங்கக் கூடிய திருக்கோயில்களிலே ஒரு லட்சம் விளக்குகளை ஏற்றினால் அந்த விளக்குகளினால் வரக் கூடிய பேரொளியானது அந்த ஊர் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைக்கும் என்று சொல்லி இந்த வழிபாட்டை நம் பெரியவர்கள் எல்லாம் தொடர்ந்து செய்து கொண்டு வந்திருக்கின்றார்கள். லட்சதீப வழிபாடானது லட்ச விளக்குகள் ஏற்றி வைத்து வழிபாடு செய்வது என்பதை குறிக்கும். அகண்ட தீபம் என்பது எண்ணிக்கையில் அடங்காத வண்ணம் நிரம்ப விளக்குகளை ஏற்றி வழிபாடு செய்வதைக் குறிக்கும். இந்த சிறப்பு வழிபாடுகள் எல்லாம் ஏற்றுகின்றவர்களுக்கும், ஏற்றி வைக்கின்றவர்களுக்கும், ஏற்றப்பட்ட ஊருக்கும், ஏற்றப்பட்ட ஊர் இருக்கும் தேசத்துக்கும்கூட நலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் இந்த அகண்ட தீப வழிபாடானது நம் தமிழகத்தில் ஒரு சில திருக்கோவில்களில்

## திருவிளக்குப் பாடல்

திருவிளக்கே திருவிளக்கே
தேவி பராசக்தி திருவிளக்கே
தேவியின் வடிவே திருவிளக்கே
தேவியே உனக்கு நமஸ்காரம்.
இருளை அகற்றும் திருவிளக்கே
இன்பம் அளிக்கும் திருவிளக்கே
எங்கும் ஒளிதரும் திருவிளக்கே
லக்ஷ்மி உனக்கு நமஸ்காரம்.
மங்கள ஜோதியாம் திருவிளக்கே
மாலையில் ஒளிதரும் திருவிளக்கே
காலையில் ஒளிதரும் திருவிளக்கே
சரஸ்வதி உனக்கு நமஸ்காரம்.
திருமகள் வடிவே திருவிளக்கே
தேவரும் பணியும் திருவிளக்கே
தென்னிந்திய ஜோதியே திருவிளக்கே
சாரதே! உனக்கு நமஸ்காரம்.



அஷ்டலக்ஷ்மி வடிவே திருவிளக்கே
ஆனந்த நர்த்தினி திருவிளக்கே
ஆலய பூஷணி திருவிளக்கே
ஆதிபராசக்தி நமஸ்காரம்.
பாக்ய லக்ஷ்மி வடிவே திருவிளக்கே
பக்தியை அளித்திடும் திருவிளக்கே
பதவியைத் தந்திடும் திருவிளக்கே
பவானி உனக்கு நமஸ்காரம்.
ஜெகமெல்லாம் விளங்கும் திருவிளக்கே
ஜெகதீஸ்வரி வடிவே திருவிளக்கே
அழகை அளிக்கும் திருவிளக்கே
அம்பா உனக்கு நமஸ்காரம்.
சௌக்ய ரூபிணி திருவிளக்கே
சந்தான பலம் தரும் திருவிளக்கே
சம்பத்தை அளிக்கும் திருவிளக்கே
சக்தியே உனக்கு நமஸ்காரம்
ராஜராஜேஸ்வரி நமஸ்காரம்.

மட்டும் செய்யப்பட்டு வருகிறது. நெல்லை மாவட்டத்தில் நெல்லையப்பர் திருக்கோயிலில் ஆண்டு தோறும் இந்த வழிபாடு தவறாமல் நடந்து வருகிறது. இந்த அகண்ட தீப வழிபாட்டை நம் பெரியவர்கள் எல்லாம் மீண்டும் துவங்கி ஒவ்வொரு சிறு கோயில்களிலும், பெரும் தலங்களிலும் செய்து வந்தால், இந்த நாடு தெய்வத் திருநாடு என்பதிலிருந்து எள்ளளவும் மாறாத நிலையை அடையும் என்பது உறுதி.

### திருவிளக்கு வழிபாட்டுக்குத் தேவையான பொருட்கள்

1. நன்றாகத் தேய்த்து சுத்தம் செய்யப்பட்ட விளக்கு. இந்த விளக்கு தண்டுடன் கூடியதாக இருக்க வேண்டியது அவசியம்.

   (வெள்ளி, செவ்வாய்க்கிழமை இரண்டு நாட்களும் மங்களமான நாட்கள். இந்த நாட்களில், பொதுவாகவே, பூஜைக்குரிய பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவுவது நல்லதல்ல. மிக குறிப்பாக, தீபங்கள், திருவிளக்குகள் இவைகளைத் தேய்க்கவே கூடாது. வியாழனன்று மாலையும், திங்களன்று மாலையும் திருவிளக்குகளைத் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்யவும்).

2. நுனி வாழை இலை. இந்த இலையானது திருவிளக்கு வைப்பதற்கு. வாழை இலை மீது சிறிது பச்சரிசியை போட்டு அதன் மீது திருவிளக்கை வைக்க வேண்டும்.

3. திருவிளக்கை ஏற்றுவதற்கு எண்ணெய், திரி தேவை.

4. நிவேதனம் செய்வதற்கு நல்ல நிவேதனப் பொருட்கள் பல உண்டு. கூட்டு வழிபாடு இருந்தால், சர்க்கரைப் பொங்கல், வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம், கல்கண்டு இவைகள் ஏற்றன. மேலும் அவரவர் சூழ் நிலைக்கு ஏற்றபடி நிவேதனங்களை அதிகப்படுத்தியோ, குறைத்தோ வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஏதாவது ஒரு அரிசிச் சாதம், வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம் இந்த மூன்றும் கண்டிப்பாகத் தேவை.

5. திருவிளக்கில் இடுவதற்கு சந்தனம், குங்குமம், கற்பூரம் காண்பிக்கும் போது, கற்பூரத்தை வைத்து தெய்வத்தின் பேர் அருளைப் பெற்ற திருநீறாக மாற்றுவதற்கு ஏற்றபடி திருநீறு, அர்ச்சனை செய்வதற்கு உதிரிப்பூ, அல்லது அதிகமான குங்குமம், வாசனை பெறுவதற்கு ஊதுவத்தி, இவைகள் எல்லாம் தேவை. நிவேதனம் செய்வதற்கு ஒரு சிறு பாத்திரத்தில் தண்ணீர் தேவை. திருவிளக்கை நன்றாக சுத்தம் செய்து கொண்டு, அதன் மீது கங்கை தீர்த்தம் இருந்தால் தெளித்துக் கொள்ளலாம். இல்லையென்றால் திருநீற்றை அதன் மீது தெளித்து எடுத்து வைத்துக் கொண்டால் போதுமானது.

இப்படிப்பட்ட திருவிளக்கை இலையிலே பரப்பிய அரிசியின் மீது வைத்து ஏற்ற வேண்டும். அப்படி ஏற்றுவதற்கு முன்னர் திருவிளக்கை வைக்கும் இடத்தை நன்றாக சுத்தம் செய்து கொண்டு பசுஞ் சாணியால் நன்றாக தூய்மை செய்து, அதன் மீது திருக்கோலமிட்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, இந்த திசைகளை நோக்கிய நுனி

யுடையதாக விளக்கை வைக்க வேண்டும். தெற்கு திசை நோக்கி விளக்கை வைத்தல் ஆகாது. விளக்கை ஏற்று வதற்கு முன்னர் நன்றாகத் திரியைப் போட்டு குளம் போன்று நிறைய எண்ணெய் அல்லது நெய் இவைகளில் எது ஏற்புடையதோ, வசதிக்கு உரியதோ அவைகளை ஊற்றி விளக்கை ஏற்ற வேண்டும். பொதுவாக நல் லெண்ணெய் சிறப்பான எண்ணெய். அதுவே போது மானது.

விளக்கை ஏற்றும் போது ''ஒளிதரும் உமையே எழுந்தருள் தாயே'' என்று சொல்லி விளக்கை ஏற்ற வேண்டும். விளக்கை ஏற்றிய பின்னர், முதலில் அந்த விளக்கிற்குப் பூஜை செய்ய வேண்டும். திருவிளக்கில் திருமகளை ஆராதிப்பதாக இருந்தாலும், தேவியை அதாவது உமையை, பார்வதியை, துர்க்கையை அதில் ஆவாகனம் செய்வதாக இருந்தாலும், ஆவாகனங்களில் கவனமாக சொற்களைப் பயன்படுத்தி ஆவாகனம் செய்ய வேண்டும். ஆவாகனம் என்றால் திருவிளக்கில் நாம் வழி படும் தெய்வத்தை நிறுத்துதல் என்று பொருளாகும்.

திருவிளக்கை ஏற்றிய பிறகு, ''திருவிளக்கு தாயே எழுக, நல்லருள் தருக'' என்று மஞ்சள் கலந்த அக்ஷ தையை அதாவது அரிசியை திருவிளக்கின் பாதத்தில் போட வேண்டும். ''திருவிளக்கே குலவிளக்கே மனத் திருள் நீக்கும் மங்கல விளக்கே, நல்வரவாய் நின்று, நலம் தரும் தாயே, உன் வரவால் யாம் மகிழ்ந்தோம்'' என்று சொல்லிவரவேற்று திருவிளக்கின் பாதத்தில் மஞ்சள் கலந்த அரிசியைப் போட வேண்டும். தண்ணீரை சிறு அகப் பையினால் அல்லது உத்திரணியில் எடுத்துக் கொண்டு ''நின் பதம் பூசித்தோம். பொலிவுறு பொலிவுறு'' என்று சொல்லித் தண்ணீரைப் பாதத்தில் ஊற்ற வேண்டும். ''திருக் கரம் அருட்கரம் கொண்ட நல் தாயே, திருவருள் பொழிந்திட அருட்கரம் காட்டுக'' என்று சொல்லி கையிலே சிறிது தண்ணீரை ஊற்றுவதாக மனதினால் நினைத்துக் கொண்டு திருவிளக்கின் பாதத்தில் தண்ணீரை ஊற்ற வேண்டும்.

''நன்னீரில் இருப்புடையாய் நலன் பெறவே அருளுடையாய், பொறுப்பு உடையாய், விருப்பு உடை யாய் பொன் மணியே போற்றுகிறோம்'', என்று சொல்லி சிறிது தண்ணீரை ஊற்ற வேண்டும். இதன் பிறகு ''நெற் றித் திலகம் நின் முகத்தில் சுற்றிச் சுடராய் எழுந்து ஒளிக்கும். பற்றிப் படரும் கொழுகொம்பாய், வரம் தரும் தேவி, நின் திருமுகம் போற்றி,'' என்று குங்குமத்தை விளக்கின் திருமுகத்திலும், தீபத்தின் மற்ற பகுதிகளிலும் நன்றாக இட்டு மனதில் அன்னையை பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். பூக்களை எடுத்து ''மலரிட்டு வணங்குவார் மகிழ்ச்சியின் வடிவே, அலரிட்டு வணங்கி னோம் அருகினில் வருவாய்'' என்று சொல்லிப் பூக்களை பாதங்களில் தூவி, மலர்ச் சரங்களை பாதங்களில் வைக்க வேண்டும். திருவிளக்கின் தலையில் கட்டுவதானால் அந்த சரங்கள் தீப ஒளியினால் எரிந்து போவதற்கு ஏதுவாக அமைந்துவிடும். சில நேரங்களில் அந்த மலர்கள் விழுந்து மலையேறவும் செய்து விடும்.

> விளக்கை ஏற்றி வெளியை அறிமின்
>
> \- திருமூலர்

இதனால் மனதுக்கு சற்று தாபங்கள் ஏற்பட ஏது வுள்ளதால், தலையிலே சரங்களை கட்டாமல் இருப் பதுவே ஏற்புடையது. பின்னர் திருவிளக்கிற்கு மங்கலப் பாடல்கள் பாட வேண்டும். சிறப்புடைய பாடல் ''மங்கல ரூபிணி மதியணி, சூலினி மன்மத பாணியளே'' என்ற பாடலாகும், மகா லக்ஷ்மியை ஆவாகனம் செய்து இருந் தால், தனவிருத்தி மாலை பாடல்கள் எட்டும் மிகவும், ஏற்புடையது, இப்பாடல்களை சொல்லிவிட்டு அருச் சனை செய்ய வேண்டும்.

வீடுகளில் செய்யும்போது, குடங்களிலே தண் ணீரை நிரப்பி, அந்தக் குடங்களை, வாழை இலையில் அரிசியைப் பரப்பி, அதன் மீது தேங்காயின் கலசங்களை வைத்து மாவிலை வைத்து, அதன் மீது தேங்காயின் கண் நம்மை நோக்கும் வண்ணம் வைத்து, அந்த நன்னீர்க் குடங்களை பூஜிப்பது உண்டு.

பொது வழிபாடுகளில் பொதுவாக யாராவது ஒருவர் பூசித்தல் போதுமானது. திருக்குட வழிபாடு என் பது திருவிளக்கு வழிபாட்டுக்கு மிகமிகத் தேவையான ஒன்று அல்ல, மூலவிளக்கு என்று சொல்லக் கூடிய தலைவிளக்கு வழிபாடு தான், திருவிளக்கு வழிபாட்டுத் தேவை. தலைவிளக்கு வழிபாடு என்றால் என்ன?

வரிசையாக அமர்ந்திருக்கக்கூடிய எல்லாப் பெண்களுக்கும் அவர்களுடைய விளக்குகளிலே விளக்கு ஏற்றுவதற்காக திருவிளக்கு வழிபாடு துவங்குவதற்கு முன்னர் ஒரு பெரிய விளக்கில் நன்றாக மாலை முத லியவைகளை சுற்றி முறைப்படியான பூஜைகளை எல்லாம் செய்து, அருச்சனை வழிபாடுகளையும் செய்து, அதற்கு நிவேதனம் செய்யும் முன்னர் அந்த விளக்கில் இருந்து முதல் விளக்கை ஏற்றி, அதன் பிறகு படிப் படியாக மற்றவர்கள் எல்லோரும் விளக்கை ஏற்றிக் கொள்ளலாம். இல்லையென்றால் எல்லா விளக்குகளுக் கும், ஏற்றுவதற்காக தலை விளக்கிலே இருந்து கை விளக்கிலே தீபத்தை ஏற்றிக் கொண்டு சென்று, எல்லோ ருக்கும் ஏற்றிக் கொடுக்கலாம். தீபத்தை உடனடியாக சுடர் பற்றிக் கொள்வதற்கு திரியின் மீது சிறிது கற்பூரத்தை வைத்தால் திரியானது உடனே ஒளி பற்றிக் கொள்ளும்.

### திருவிளக்கு 108 போற்றி

பொலிவுறும் விளக்கே போற்றி!
பொன்தரு பெருமான் விளக்கே போற்றி!
முழுதும் ஒளியே எழுவாய் போற்றி!
உலகம் யாவும் ஒளிர்வாய் போற்றி!
இன்பம் சுரக்கும் விளக்கே போற்றி! .

இருந்தருள் செய்ய எழுந்தாய் போற்றி!
மண்ணில் ஒளிரும் மலரே போற்றி!

கண்ணில் ஒளிரும் களிப்பே போற்றி!
திருவே திருவே திருவே போற்றி!
அறிவே அறிவே அறிவே போற்றி!

அடங்காமை அடக்கும் அம்மா போற்றி!
கடக்கத் துணைவரும் கண்ணியே போற்றி!
முடக்கங்கள் யாவும் முடிப்பாய் போற்றி!
மகிழ்ச்சியைத் தருவாய் மங்களா போற்றி!
ஓமெனும் எழுத்தில் உள்ளாய் போற்றி!

ஆங்காரம் அடக்கும் அறிவே போற்றி!
தூங்காமல் எழுப்பும் துணையே போற்றி!
வல்லமை நல்கும் வல்லியே போற்றி!
அறந்தரும் நாயகி அம்மா போற்றி!
திறந்தரும் தாயே திருவே போற்றி!

அம்மையே ஒளியே வருவாய் போற்றி!
விளக்கில் எழுந்த விண்தாய் போற்றி!
களத்தில் எழுந்த கற்பகம் போற்றி!
போற்றுவார் போற்ற புகழ்வாய் போற்றி!
சுற்றிடும் மனத்தைக் கட்டுவாய் போற்றி!

சுழிக்குள் முட்டா சுவையே போற்றி!
பழிக்குள் விழாமல் காப்பாய் போற்றி!
கருணை மாக் கன்னியே போற்றி!
அருணை நகரில் அமர்ந்தாய் போற்றி!
மதுரை நகரில் மணப்பாய் போற்றி!

காசி நகரில் களித்தாய் போற்றி!
காஞ்சி நகரில் கனிந்தாய் போற்றி!
இடர்கள் யாவும் எரித்தாய் போற்றி!
கடலாய் எனக்குக் கனிந்தாய் போற்றி!
மடலாய் மணக்கும் மங்களை போற்றி!

நான்மறை ஆன நாயகி போற்றி!
தமிழ்மறை ஆனாய் தண்ணொளி போற்றி!
ஒளிதரும் விளக்கே உமையே போற்றி!
ஓதினோம் உன்னடி உமையே போற்றி!
இருளிலா வாழ்வைத் தந்தாய் போற்றி!

சொல்லும் பொருளும் ஆனாய் போற்றி!
பல்வித நலன்களைப் பகர்ந்தாய் போற்றி!
நமச்சிவாய ஒளியே போற்றி!
சிவசிவ சிவசிவ சிற்பரை போற்றி!
வசிவசி வசிவசி வனிதை போற்றி!

புகழ்மனம் தந்த பொன்னியே போற்றி!
இகழ்வெலாம் தீர்த்த இலஞ்சியே போற்றி!
உயிரைக் காத்த உமையே போற்றி!
வாடிடும் போதில் காத்தவள் போற்றி!
தேடிடும் போதில் வந்தனள் போற்றி!

பாடிடும் போதில் படர்ந்தாய் போற்றி!
தேவியே உன்னடி தினமும் போற்றி!
தில்லையில் நடமிடும் சிவையே போற்றி!
நான்மறை தேடிடும் நாயகி போற்றி!
கற்பனை கடந்த கனியே போற்றி!

சித்தர்கள் பாடிடும் சிவையே போற்றி!
சித்தர்கள் மனத்துறை சிற்பரை போற்றி!
வனத்தில் வாழும் மனோன்மணி போற்றி!
குணங்கள் கடந்த குருவே போற்றி!
குமரியாய் என்றும் குலவுவாய் போற்றி!

அமரர்கள் தாயே அம்மா போற்றி!
தானவர் தாயே தயவே போற்றி!
எட்டாதிருக்கும் எழிலே போற்றி!
எட்ட வந்திடும் எந்தாய் போற்றி!
படரக் கொம்பாய் வந்தனை போற்றி!

சுடர் தரும் விளக்கே சூரியே போற்றி!
படர் தரும் விளக்கே பண்டிதை போற்றி!
எள்ளில் எண்ணெயாய் இருந்தாய் போற்றி!
பாலில் தயிராய் படர்ந்தாய் போற்றி!
வெண்ணெயில் நெய்யாய் விளங்கினாய் போற்றி!

என்குலங் காக்க எழுந்தவள் போற்றி!
அரவெனும் அணியை அணிந்தாய் போற்றி!
அழகுசேர் மதியில் அமர்ந்தாய் போற்றி!
குறவர்கள் குலத்துள் குளிர்ந்தாய் போற்றி!
குன்றின் உச்சியின் குமுதமே போற்றி!

நல்லோர் நடுவில் நடிப்பாய் பேற்றி!
வல்லமை வளர்க்கும் வைரவி போற்றி!
சொல்லும் பொருளும் சுரப்பாய் போற்றி!
வில்லும் வேலும் விரும்பினாய் போற்றி!
தானவர் வானவர் தாயே போற்றி!

தாமரை மலருறை தாயே போற்றி!
கானகம் யாவும் கனிந்தாய் போற்றி!
கணமணி நன்மணி பொன்மணி போற்றி!
செப்பிட யந்திரம் இருந்தாய் போற்றி!
அப்பனும் ஆயும் நீயே போற்றி!

ஒப்பிலா மணியாம் ஒருத்தியே போற்றி!
கப்பிடும் இருளில் கள ஒளி போற்றி!
நித்தியை நிர்மலை நிரஞ்சனை போற்றி!
சத்தியை சற்குழை சாம்பவி போற்றி!
வித்தியை விமலை வ்ருத்தியை போற்றி!

சுத்தை சுதந்திரை சுகன்யை போற்றி!
அஷ்டமி தேவ்யை அம்மையே போற்றி!
கஷ்டங்கள் தீர்க்கும் காஞ்சனை போற்றி!
இஷ்டங்கள் நிறைத்திடும் இனியவளே போற்றி!
புஷ்டியே தந்திடும் புண்ணியள் போற்றி!

தவத்துள் பிரியமாய் தனித்தனை போற்றி!
சிவத்துள் இருந்து சிலிர்த்தனை போற்றி!
நவமெனும் சக்தியே நம்பினேன் போற்றி!
சிவசிவ ஹரஹர சிற்பறை போற்றி!
முருகனின் தாயே முனிமகள் போற்றி!

அருகினில் இருந்து அருளுவாய் போற்றி!
குருவெனும் மந்திரம் கொடுத்தனை போற்றி!
நறுமலர் நாயகி நம்பினேன் போற்றி!
முக்கோண வீட்டில் முளைத்தவள் போற்றி!
ஷட்கோண நடுவில் ஷண்முகை போற்றி!

## தனவிருத்தி மாலை

*1. தனலட்சுமி*

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம் வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா!

*2. ஆதி லட்சுமி*

சோதிமிக வுடையாள் சோம்பலற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

*3. தான்ய லட்சுமி*

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலக்கதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செயிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

*4. வீர லட்சுமி*

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர் ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீங்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா!

*5. கஜ லட்சுமி*

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடா அத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிவர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா!

*6. சந்தான லட்சுமி*

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும்
அன்னையவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யமுதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய்
போற்றியம்மா!

*7. விஜய லட்சுமி*

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா!

*8. ஐஸ்வர்ய லட்சுமி*

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே பெய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே
போற்றியம்மா!

*எட்கோண வீட்டில் எமதருள் போற்றி!*
*உட்கோண வீட்டில் உறங்குவாய் போற்றி!*
*ஊக்குவார் கரங்களை உயர்த்துவாய் போற்றி!*

இதன் பிறகு தீபத்துக்கு ஊதுவத்தியைக் காண்பிக்க வேண்டும். அதன் பிறகு தீபத்தை ஏற்றி ''தீப மங்கள ஜோதி நமோநம'' என்று சொல்லி தீபத்தைக் காட்ட வேண்டும். அதன் பிறகு வெற்றிலைப் பாக்கு, பழம், நைவேத்யங்களை நிவேதனம் செய்து, கற்பூரத்தைக் காட்ட வேண்டும். கற்பூரத்தை காட்டும் போது சொல்ல வேண்டிய மந்திரமானது;

மங்களமாம் அனைத்தினிற்கும் மங்களமே சிவமே
மக்கள் விழைநாட் பொருளும் வழங்கு நல்தாயே
எங்கள் புகழே விழி மூன்று எய்தியவளே
கெளரி எழில் நாராயணி உன்னை இறைஞ்சிடு
வோம் யாமே.
நம் தாயே நின்பத மலர் தரிசித்தோமே.

''யாமே நலம் பெற ஒளி பெற்றோமே, யாமே ஒளிபெற நலம் பெற்றோமே, யாமே நிறைநலம் பெற அருள் பொழிவாய் போற்றி'' என்று சொல்லிக் கற்பூரத்தை, காட்டி அந்தக் கற்பூரத்தை புஷ்பத்தால் சுற்றி திருவிளக்கின் பாதங்களில் போடவேண்டும். அதன் பிறகு கற்பூரத்தை கண்ணில் ஒற்றிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு ''ஏற்புடையாய் எழிலுடையாய் கற்புடையாய் கண்ணுடையாய் நோற்புடையாய் நோன்புடையாய் சீர் புடனே அருள்தருவாய் நின்னடி பணிந்தோம். திருவிளக்கே நின் நிலைக்களம் எழுகவே திருவிளக்கே'' என்று சொல்லி திருவிளக்கை சற்று முன்பாக இழுத்து, அந்தத் திருவிளக்கில் உள்ள தெய்வ சக்தியானது ஏற்புடைய இடத்துக்கு எழட்டும் என்று சொல்லி பூஜையை முடித்து விட வேண்டும்.

இந்த விளக்கை மலையேற்றாமல் இல்லங்களுக்குக் கொண்டு செல்ல முடிந்தவர்கள் கொண்டு செல்லலாம். அல்லாதவர்கள் இந்த விளக்கை மலையேற்றிவிட்டு அந்தத் திருவிளக்கை வீட்டில் கொண்டு போய் வைத்துப் புதிதாக தீக்குச்சியை உரசி விளக்கேற்றிக் கொள்ளலாம். அல்லது இந்தத் திருவிளக்கு வழிபாடு முடிந்தவுடன், ஊதுபத்தி சற்று அதிகமாக கொளுத்திக் கொண்டு தங்கள் இல்லங்களுக்கு அந்த ஊதுவத்தியை கொண்டு சென்றால், அந்த ஊதுவத்தியில் இருந்து தீக்குச்சி மூலமாக விளக்கேற்றுவது மிகச் சுலபமானது ஆகும்.

# திருவண்ணாமலையில் தெய்வீகச் சூழலில் தீபக் காட்சி

– பெரும்புலவர் ஆ. பாண்டுரங்கனார்

படைப்புக் காலத்திலேயே திருவண்ணாமலை தெய்வத்தன்மை உடையதாக விளங்கலாயிற்று. 'நான்' என்னும் முனைப்பு அற்றாலன்றி இறைவனை அணுக இயலாது எனும் உண்மையை அயனையும் அரியையும் கொண்டு சிவபிரான் உலகிற்கு உணர்த்திய நிகழ்ச்சி இத்தலத்தில்தான் நிகழ்ந்தது. எனவே தபோதனர் பலரும் அண்ணாமலையை நாடி வருவாராயினர். இதனை

'ஞான தபோதனரை வாவென்று அழைக்குமலை
அண்ணாமலை'

என்று பிற்கால ஞானிகள் பாராட்டிப் பாடுவாராயினர். அயனுக்கும், அரிக்கும் உண்மையை உணர்த்த வேண்டிச் சிவபிரான் அருட்சோதிப் பிழம்பாகத் தோன்றியருளினார். அச்சோதியானது மேலும் கீழும் உள்ள அண்டங்களையெல்லாம் கடந்து நின்றது. அச் சோதிப் பிழம்பின் அடியையும், முடியையும் காண்பீராயின் நீவிர் உங்களை பரம்பொருளாகக் கருதலாம் என்று ஓர் அசரீரி ஓதிற்று. அவர்கள் அவ்வாறே முயற்சி செய்து தோல்வியுற்றனர். அந்த நிலையில் சோதிப் பிழம்பைப் பிளந்துகொண்டு ஒரு திருவுருவம் வெளிப்பட்டது. உருவமற்ற இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்க வேண்டி முதன்முதலாக எடுத்த உருவம் இதுவே ஆகும். இத்திருவுருவத்திற்கு 'லிங்கோத்பவ மூர்த்தி' என்பது பெயராகும்.

இத்திருவுருவத்தை எல்லாச் சிவாலயங்களிலும் கருவறையின் பின்புறத்தே காணலாம். அண்ணாமலையார் என்ற பெயரையும் பொறித்து வைத்திருப்பர். இந்த நடைமுறையானது அண்ணாமலையே முதற்கண் தோன்றிய திருத்தலம் என்ற உண்மையை வெளிப்படுத்தும்.

இந்த வரலாறு உண்மையானது என்பதை ருக்வேத சுலோகங்களைக் கொண்டும், வியாசர் இயற்றிய ஸ்காந்த புராண வரலாற்றைக் கொண்டும் அறியலாம். உலகில் முதற்கண் தோன்றிய திருத்தலம் ஆதலால் நாற்றிசையினும் வாழ்ந்த அருளாளர் அனைவரும் இத் தலத்தை நாடி வருவாராயினர்.

'பவக் கடல் கடந்து முத்தியம் கரையில் படர்பவர் நாளும் திகைப்பற நோக்கித் தவக்கலன் நடத்த வளர்ந்தெழும் சோண சைலனே கைலை நாயகனே' என்று சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார்.

இதன் பொருளாவது : பிறவிக் கடலை கடப்பதற்குத் 'தவம்' எனும் மரக்கலத்தில் ஏறிக் கரை சேர முயல்வோருக்கு கலங்கரை விளக்கம் போல் விளங்கும் சோண சைலனே என்பது பொருளாகும்.

## தவக் குடில்கள் (ஆசிரமங்கள்)

அண்ணாமலையை நாடி வந்த அருளாளர்கள், அண்ணாமலையில் உண்டாகும் மன அமைதியை அனுபவத்தில் கண்டறிந்து அங்குள்ள மலைச்சாரலில் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு அருந்தவம் இயற்றத் தொடங்கினர். அடர்ந்த காடும் அமைதியான சூழலும் அருவிநீரும் அவர்களுக்கு இன்பம் தந்தன. ஆகவே திருமலையைச் சுற்றியுள்ள இடங்களில் தொடர்ந்து தவச் சாலைகள் தோன்றின. எட்டு மைல் சுற்றளவுள்ள மாலையில் தபோதனர்கள் தவம் இயற்றலாயினர். பிற்காலத்தில் விக்கிரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் அம் மலைச் சாலையைச் செம்மைப்படுத்தி 8 பிரிவுகளாக்கி எட்டு அடையாள கற்களையும் நாட்டினான். அக்கற்களில் அவன் பெயரும், பிரிவின் எண்ணும் எழுதப் பெற்றன. அக்கற்களை இன்றும் காணலாம்.

மலைச் சாரலைச் சுற்றி அமைந்துள்ள சாலையினை அடுத்து தவ குடில்கள் இருந்ததனால் அதற்குச் 'சாலை' என்று பெயரிடாமல் 'திருவீதி' என்று பாண்டியன் பெயரிட்டான். வீதி என்றால் வீடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மலைச் சாரலில் வீடுகள் இல்லையாயினும் தவச் சாலைகள் இருந்ததால் அவ்வாறு பெயரிட்டான். அப்பெயரே அங்குத் தவச் சாலைகள் இருந்ததை மெய்ப்பித்து காட்டும். காலப் போக்கில் அத்தவச் சாலைகள் மறைந்தன. ஆனால் அடையாளம் காட்ட வேண்டி கௌதமர் ஆசிரமம், துருவாசர் ஆசிரமம், பிருங்கி முனிவர் ஆசிரமம் ஆகியவை இன்றும் உள்ளன. மேலும் ஈசான்ய ஞான சேதிகர் அருந்தவம் புரிந்த ஈசான மடமும், தெய்வ சிகாமணி தேசிகர் அருந்தவம் புரிந்த இடமும் இன்றும் காணப்பெற்று வருகின்றன. தெய்வ சிகாமணி தேசிகர் தவம் புரிந்த இடத்தில் அவர் காலத்திய

தட்சிணாமூர்த்தி சுவாமிகள் திருக்கோயில் பூசையுடன் விளங்கி வருகிறது. இக்கோயில் வடக்கு மாட வீதியில் கலியாண கிணற்றை அடுத்து இருக்கிறது. இவற்றைத் தவிர குகை நமச்சிவாய தேவர் தவமியற்றிய குகைக் கோயில் மலையின் மேல் அமைந்திருக்கிறது.

திருமலையை வலம் வரும் சாலையாகிய விக்கிரம பாண்டியன் திருவீதியை அடுத்தும், சிறிது உள் அடங்கியும் 96 தெய்வச் சன்னிதிகள் காணப்படுகின்றன.

திருமலையின் மேற்றிசையில் ஏறக்குறைய 700 ஆண்டுகட்கு முன் இப்பகுதியை ஆட்சி செய்த கோப் பெருஞ்சிங்கன் என்ற மன்னன் தபோதனர்கள் தென்றலைத் துய்ப்பதற்கும், கூடி உரையாடுவதற்கும் பயன்படுமாறு ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டினான். அம் மண்டபம் இன்று 'நேர் அண்ணாமலையார் திருக்கோயில்' என்று அழைக்கப்படுகிறது.

### தீபத் திருநாளன்று மலைவலக் காட்சி

தீபத் திருநாளை முன்னிட்டு அண்ணாமலையில் உள்ள திருமலையை வலம் செய்யும் பொருட்டு நாட்டின் பல்வேறு திசைகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் அருணையில் வந்து கூடுகின்றனர். மலைவலம் வரும் சாலையில், அஃதாவது விக்கிரம பாண்டியன் திருவீதியில் மக்கள் அடர்த்தியாக இடைவெளியே இல்லாவகையில் வலம் வருவர். திருமுறை பாராயணத்துடன் பல குழுவினர் வலம் செய்வர். நூற்றுக்கணக்கான மக்கள் நமச்சிவாய மந்திரத்தை ஓதிக் கொண்டே செல்வர். பெரும்பாலரான மக்கள் 'அண்ணாமலைக்கு அரோகரா' என்று முழக்கம் செய்வர். ஆயிரக்கணக்கான மக்கள் சிவ சிவ மந்திரத்தை மெல்லிய குரலில் ஓதிக்கொண்டே செல்வர். மேலும் பலர் திருமுறைப் பாடல்களை ஓதிக் கொண்டே செல்வர். இவ்வாறான தெய்வீக ஒலி எட்டு மைல் சுற்றளவிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அத் தீபத் திருநாளில் திருமலையை மும்முறை வலம் செய்வோரும் உளர். தீபத் திருநாளன்று திருவண்ணாமலை மக்களுள் பெரும்பாலோர் தீப தரிசனத்தைக் கண்டு கை தொழுத பிறகு மாலை 6 1/2 மணிக்கு மேல் உணவு கொள்வது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும்.

இம்மலை வலக் காட்சியை துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பின்வருமாறு கூறுகிறார்:-


மக்கள் அடர்த்தியாக தொடர்ந்து மலையைச் சுற்றிக் கொண்டிருக்கும் காட்சி பாற்கடலில் மேரு மலையை மத்தாக இட்டு, வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டு அமுதம் எடுக்கக் கடலைக் கடைந்த காட்சியை ஒத்திருக்கிறது. திருவண்ணாமலையில் சிவலிங்க வடிவமாய் உள்ள திருமலையை மேருமலைக்கு ஒப்பிட்டு அருணை நகரினைப் பாற்கடல் ஆக்கித் தொடர்ந்து சுழன்று நடந்து வருகின்ற மக்கள் தோற்றம் வாசுகி என்ற பாம்பின் வடிவமாகவும் கற்பனை செய்கிறார். சிவஞானம் என் னும் அமிழ்தம் தோன்றிட மேற்கூறிய வாறு மக்கள் கடலைக் கடைவதாக கற்பனை செய்கிறார்.

குலம்புரி துயரம் கழன்று நின் கழற்கால்
புந்தியம் சினகரத்து இருத்தி
நலம்புரி மனிதர் பேரவை தமியேன்
நணுகுவான் அருளும் நாள் உளதோ?
வலம்புரி மனிதர் கடல் என ஒலித்து வளைவுற
நடுவண் மந்தரம் போல்
தலம்புரி தவத்தில் நின்றொளிர் சோணசைலனே
கைலைநாயகனே.

> ## அண்ணாமலை
>
> ''ஏழைக்கு இரங்குமலை
> ஏதேது கேட்டாலும்
> கோழைப்படாமல் கொடுக்குமலை - வேழம்
> உரித்தமலை அம்மைக்கு
> ஒரு பாகம் ஈந்த
> மருத்துமலை அண்ணா மலை''
>
> - குருநமச்சிவாயர்

### மகா தீபக் காட்சி

தீபத் திருநாளன்று மாலை 5.30 மணி முதற் கொண்டே நகர மக்களும் அயலூர் அன்பர்களும் திரள் திரளாக ஆங்காங்கே அமர்ந்து மலைச்சிகரத்தை நோக்கிக் கொண்டு இருப்பர். மாலை 6 மணி அளவில் இலட்சக் கணக்கான மக்களுடைய கண்கள் மலை உச்சியை நோக்கி கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும். வீதிகளிலெங்கும் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கும். மலைவலச் சாலையிலும் மக்கள் அடர்ந்திருப்பர். இந்தத் தீபக் காட்சியை காண வேண்டி சிற்றூர்ப்புறங்களில் உள்ள மக்களும்



தங்கள் தங்கள் ஊரிலேயே மேடான பகுதிகளில் இருந்து மலைச்சிகரத்தை நோக்கி கொண்டிருப்பர். இத்தீபச்சுடர் நாற்றிசைகளிலும் 20 மைல்கள் வரை காட்சி அளிக்கிறது. இந்தப் பரப்பிற்கு உட்பட்ட சிற்றூர் மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் ஊரிலிருந்தே தரிசனம் செய்கின்றனர். வயல்வெளியில் வேலை செய்யும் உழவர் பெருமக்களும் வயல் வெளியிலிருந்து கொண்டே தீபக் காட்சியைக் காணக் கை கூப்பி நின்று கொண்டிருப்பர். தெய்வீகத் தீபச்சுடர் மலைசிகரத்தில் தோன்றிய அளவிலே 20 மைல் வரையில் 'அண்ணாமலைக்கு அரோகரா' முழக்கம் மேலோங்கி ஒலிக்கும். நகரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டாரும் ஒரு நாட்டில் மாவிளக்கு இட்டுப் பழங்களை நிறைத்து ஊதுபத்தி ஏற்றிவைத்து காத்துக்கொண்டிருப்பர். தீப தரிசனம் தோற்றமளித்த உடனே ஒரே நேரத்திலே எல்லா வீடுகளிலும் மணி ஓசை கேட்கும். இருந்த இடத்திலிருந்தே மலைச்சுடருக்கு தீபாராதனை செய்வர். குறிப்பிட்ட ஒரு கண நேரம் சொல்லுக்கடங்காத அளவில் தெய்வீகச் சூழ்நிலை காணப்படும். தீபத் திருநாளன்று மாலை 6 மணி அளவில் திருக்கோயில் வளாகத்திலும் மலையைச் சூழ்ந்த வளாகத்திலும் காணப்படும் தெய்வீகத் தன்மையை நேரில் கண்டால்தான் முழுமையாக உணர முடியும். சொல்லில் அடக்க இயலாது. எழுத்திலும் அடங்காது. ஆகவே மக்கள் அனைவரும் இம் மகாதீபத்தைக் கண்டு களித்து வணங்கி வாழ்த்தி இறைவன் திருவருளை பெறுவாராக.

வாழ்க வையகம்! வளர்க சமய நெறி!

திருச்சிற்றம்பலம்

அண்ணாமலைக்கு அரோகரா.

★ ★ ★

# ஸ்ரீ கேதார கௌரிவிரதம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

ஒரு நாள் கைலாயத்தில், தங்கள் பரிவாரங்களுடன் பார்வதி பரமேஸ்வரர் மகிழ்ந்திருக்கும் சமயத்தில், சிவபக்தரான 'பிருங்கமகரிஷி' என்பவர் உமையை விட்டு, ஈஸ்வரனை மட்டும் சுற்றி வர, இது ஏன் என்று, உமையானவள் வினவ, ஈசனும், ''அப்பக்தனுடைய எண்ணம், உன்னால் எவ்வித பிரயோஜனமும் இல்லை என்பதை நிச்சயமாக நினைத்தே, உன்னை விட்டு என்னை மட்டும் வலம் வந்து துதிக்கிறான்'' என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட உமையவள் வருத்தமும் கோபமும் மேவிட, ஈசனிடம், ''பூவுலகம் அடைந்து, எப்படியும் தங்கள் உடம்பில் பாதியைப் பெற்ற பின்னே கைலாயம் திரும்புவேன்'' என்று உறுதியுடன் கூறி விட்டு, பூலோகம் வந்தடைந்து, கௌதம ஆஸ்ரமம் அடைந்து, கௌதமமுனிவர் மூலம், இவ்விரத மகிமையை அறிந்து, இவ்விரதத்தை மிகுந்த சிரத்தாபக்தியுடன் உக்கிரமாகச் செய்து முடித்தபின், ஸ்ரீ பரமேஸ்வரர் ரிஷபாருடராய் காட்சி அளித்து, உமையின் விரதத்தைமெச்சி, சந்தோஷித்து, உமையின் விருப்பப்படி, தன் சரீரத்தில் சரிபாதியாக அளித்தார். இத்திருக்காட்சியான அர்த்த நாரீஸ்வரரை கௌதமமுனிவர் கண்டு பரவசமடைந்தார். அவருக்குக் காட்சி தந்தபின், தன் தேவகணங்களுடன் திருக்கைலாயம் வந்தடைந்தனர்.

இவ்விரத மகிமையைக் கண்ட தேவர்கள், ரிஷிகள், அப்ஸர ஸ்திரீகள் முதலியவர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கத் தலைப்பட்டார்கள்.

தேவகன்னியர்கள் பிரதிதினமும் பூலோகத்திற்கு வந்து, கங்கைக்கரையில் ஆலவிருட்சத்தின் கீழ், 21 நாள் நோன்பு நோற்பது கடினம் என்றெண்ணி, ஒரே தினமாக, ஐப்பசி மாதம், கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில், அல்லது அமாவாசையில் (தீபாவளி அமாவாசை அன்று), அக்கன்னியர்கள், கங்கைக்கரையில் மணலினால் லிங்கம் பிரதிஷ்டை செய்து 21 முறை பூஜித்து, 21 பழம், 21 அதிரஸம், 21 வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை, 21 விபூதி உருண்டை, 21 வெற்றிலை, 21 பாக்கு, 21 இழையுள்ள நூலில் 21 முடிகள் போட்டு வைத்து, நல்ல மணமுள்ள வாசனைப் பூக்களினால் அர்ச்சித்து தூபதீப நெய்வேத்தியங்களைச் செய்து, சோடசோபசாரங்களுடன் இவ்விரதத்தை ஒவ்வொருவரும் செய்து வந்தனர்.

ஆலம் விழுதிலிருந்து இழை எடுத்து, 21 இழைகளைக் கொண்டு, ஒரே நூலாகத் திரித்து, 21 முடிகள் போடவேண்டும். அப்படிக் கிடைக்காவிடில், சுத்தமான நூலைக்கொண்டு, 21 இழைகள் எடுத்து, ஒரே கயிறாகத் திரித்து 21 முடிகளைப் போட்டு, மஞ்சள் தடவி, பூஜிக்க வேண்டும்.

உஜ்ஜயினி பட்டினத்தில், ஒரு ஏழை அந்தணருக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். ஒருத்தி புண்ணியவதி, மற்றொருத்தி பாக்கியவதி. இவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். ஒருநாள் அவர்கள் இருவரும் யதேச்சையாக கங்கை கரைக்கு வந்தனர். அங்கு நோன்பில் ஈடுபட்டிருக்கும் தேவ கன்னிகைகளைக் கண்டனர். அவர்களிடம் சென்று இருவரும், ''என்ன நோன்பு? விரதம் என்றால் எப்படி செய்ய வேண்டும்? இதன் நன்மை யாது, எங்களுக்குச் சொல்ல வேண்டுகிறோம்'', என்றனர். தேவகன்னிகைகளும், விரத மகிமையை எடுத்துச் சொல்லி, அவர்கள் நோன்பு செய்யும்போது, இவர்களையும் உடன் அழைத்து, கூடவே நோன்பைச் செய்து வைத்தார்கள். ஆலம் விழுதை 21 இழைகளாகத் திரித்து, நோன்புக்கயிறாக்கி, 21 முடிகள் போட்டு, தங்கள் பூஜை முடிந்த பின், அதை அவர்கள் கையில் கொடுத்து, ஆசீர்வாதம் செய்து, இம்மாதிரியாகவே, வருடா வருடம் இந்நோன்பை அனுஷ்டித்து வந்தால், அவரவர்கள் கோரிக்கைகள் நிறைவேறும்'', என்று வாழ்த்து கூறி விடை பெற்றுச் சென்றனர் தேவ கன்னிகைகள்.

இவ்விரு பெண்களான புண்ணியவதி, பாக்கியவதி என்போர் தங்கள் நாடு சென்று, வீட்டைத் தேட அவைகள் மாறி, மாடமாளிகையாகவும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் தவிக்கும் நேரம், அவர்களுடைய பெற்றோர்கள் தங்கள் பெண்களைக் கண்டு, தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போய், விலையுயர்ந்த பொன் மாலைகளையும், ஆடைகளையும் தந்தார்கள். உணவுவகைகளும் பலவிதங்களில் இருப்பதைக்கண்டு ஆச்சர்யமடைந்து, தாங்கள் கண்டவைகளையும், தேவ கன்னிகைகள் கொடுத்த நோன்புக் கயிற்றின் மகிமைகளையும் எடுத்துக் கூறி ஆனந்தப்பட்டனர். பெற்றோரும் அது முதல் இந்நோன்பை செய்துவர, சகலவிதமான சுக போகங்களுடன் வாழ்ந்து வரலானார்கள்.

* * *

அப்பொழுது உஜ்ஜயினி பட்டின இளவரசன் இவர்களை நாடி வந்து, புண்ணியவதியைத் தனக்கு ஏற்ற வள் என்று எண்ணி, அவளைக் கல்யாணம் செய்து கொண்டு, தன் பட்டினம் சென்று சுகத்துடன் வாழ்ந்து வந்தான்.

சில் காலத்தில் சோழதேச இளவரசன் பாக்கிய வதியை மணம் புரிந்து சகல சம்பத்துடன் வாழ்ந்து வந்தான். இவ்விதமாக இருசகோதரிகளும் எவ்வித குறைவுமில்லாமல், புத்திரபாக்யத்துடன், சகல வைப வங்களுடன் வாழ்ந்துவரலானார்கள்.

சில ஆண்டுகள் சென்றபின், பாக்கியவதி ஆன வள், தன் செல்வச் செருக்கால், நோன்புக் கயிற்றை அவிழ்த்து, அவரைப் பந்தலின் மேல் வைத்தவள், மறந்து போய், அதைத்திரும்பவும் எடுத்துக் கையில் கட்டிக் கொள்ளாமல் விட்டதில், நோன்பை மறந்து விட்டாள்: அதனால் செய்யாமல் விட்டு விட்டாள். இவ்விதம் நடந்த சிலகாலம் சென்றபின், அந்நியநாட்டு அரசன், சோழ தேசத்தின் மீது படையெடுத்து, அப்பட்டினத்தைக் கைப் பற்றினான்; அங்குள்ளவைகளைக் கொண்டுசென்ற தால், அவள் தன் கணவன் குழந்தைகளுடன் நாடுவிட்டு காடு செல்ல நேர்ந்தது. அன்னம், ஆடைகளுக்கே மிகவும் சிரமப்படும் நேரம் அது. அவரைப்பந்தலில் நோன்புக் கயிறு இருந்ததில், அதில் அவரைக் காய்கள் மிகுதியாய் காய்க்க ஆரம்பித்தது. அவளும் அக்காய்களைக் கொண்டு சமையல் செய்து, தன் கணவனுடனும், குழந்தைகளுட னும் புசித்து, ஒருவாறு வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் தன் பெரிய மகனை அழைத்து, ''மகனே! நாம் இவ்வளவு சிரமப்படுகிறோம்; அதனால் உன் பெரிய தாயாரைக் கண்டு, விவரங்களைக் கூறி, ஏதாவது பொருள் வாங்கி வா'', என்று அனுப்பினாள். அவனும் தன் பெரிய தாயாரிடம் சென்றான்; தான் யார் என்பதையும் சொன்னான்; தங்கள் நிலைமையை எடுத் துச் சொல்லி, ஏதாவது பொருள் கேட்டு வாங்கி வரும்படி தன் தாயார் அனுப்பியதையும் கூறினான். இதைக் கேட்ட புண்ணியவதி மிகுந்த வருத்தமடைந்தாள்; அவனுக்கு உண்ண உணவளித்தாள்; ஆடை, ஆபரணங்களும், பொரு ளும் கொடுத்து, வழிக்கு உண்ண உணவு மூட்டையை யும் கட்டிக் கொடுத்தாள். அவனை நல்லபடியாகச் செல் லும்படி சொல்லியனுப்பினாள். அவனும் அவைகளை எடுத்துக் கொண்டு நெடுந்தூரம் வந்தபின், கங்கைக் கரையில் அம்மூட்டைகளை ஒரு இடத்தில் வைத்து விட்டு, ஆகாரத்தை உண்ண ஆரம்பித்தான்! ஈஸ்வர மாயையினால் ஒரு கருடன் வந்து, அம்மூட்டைகளை எடுத்துச் சென்றுவிட்டது! அவனும் கைக்கு எட்டியது இப்படி ஆகிவிட்டதே என்று வருந்தி, மறுபடியும் பெரிய தாயாரிடம் சென்று நடந்தவைகளைச் சொல்லியதில், அவளும் வருந்தி, மறுபடியும் ஆடை, ஆபரணங்களை

## விரதமிருப்பார் பெறும் பலன்

வையம் துரகம் மதகரி
மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை
ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்
தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவம் உடை யார்க்கு உள
வாகிய சின்னங்களே.

- அபிராமி அந்தாதி

யும், பொருளும் கொடுத்து, ஆகாரமும் கொடுத்து வழி யனுப்பினாள். மறு முறையும், கங்கைக் கரையில் உணவு உண்ணும் நேரம், கங்கை நீரிலிருந்து ஒரு திமிங்கிலம் வந்து, அம்மூட்டைகளை விழுங்கிக்கொண்டு போய் விட்டது. இதைக்கண்ட சிறுவன் மிகவும் வருந்தினவ னாக, மறு முறையும் தன் பெரிய தாயாரிடம் செல்லத் திரும்பும்போது, அசரீரியின் வாக்கு ஒலித்தது. அதாவது, 'விரத பிரஷ்டாளுக்கு இப்பொருள் எவ்வாறு கிடைக்கும்' என்பதாகும். இதைக்கேட்டவன், தன் பெரியதாயாரிடம் நடந்தவற்றையும், அசரீரியின் வாக்கையும் விவரித்தான். இதைக்கேட்ட புண்ணியவதி, ''உன் தாயார் நோன்பு செய்வதில்லையா'' என்று கேட்டாள். அவனும், ''என் தாயாரும் தாங்களும் விரத மகிமையால்தான் இந் நிலைக்கு உயர்ந்ததாகவும், சமீபகாலமாகத்தான் என் தாயார் இந்நோன்பு செய்வதில்லை'' என்றும் கூறினான். அவளும் அந்நோன்பு வரும்வரையில் அச்சிறுவனைத் தன்னிடமே வைத்துக்கொண்டு, அந்நோன்பன்று, விர தத்தை பக்தி சிரத்தையுடன் செய்தாள். தன் சகோதரிக் கும் சகல சம்பத்தும் உண்டாகும்படியும் வேண்டிக்கொண் டாள்; 21 இழைகளுடன் கூடிய நோன்புக்கயிற்றையும், பிரசாதத்துடன் கொடுத்து, ''நீ, இந்நோன்புக் கயிற்றை உன் தாயாரிடம் கொடுத்து, வருடாவருடம் தவறாமல் இந்நோன்பை செய்யும்படி சொல்'' என்று சொல்லி, சில பொருளையும், ஆடை ஆபரணங்களையும் கொடுத்து, வழிக்கு ஆகாரமும் கொடுத்தனுப்பினாள். அவனும் வரும்வழியில், தான் முன் கங்கைக் கரையில் சாப்பிட

அமர்ந்த இடத்திலேயே, இம்முறையும் ஆகாரம் சாப்பிட மூட்டையை அவிழ்த்து உண்ணும் நேரம், கருடனால் கொண்டுசென்ற மூட்டையும், திமிங்கிலத்தினால் விழுங்கிய மூட்டையும் வந்து இவன் முன் சேர்ந்தது. அவைகளைக் கண்ட சிறுவன் எல்லாம் ஈஸ்வர அனுக்கிரகத்தினால் காணாமல் போனபொருள்கள் கிடைத்தது என்று மனம் மகிழ்ந்து, அவைகளையும் எடுத்துப் பத்திரப் படுத்திக்கொண்டு தன் தாயாரைக் காணப்புறப்பட்டான். சோழநாடான தன் நாட்டை அடைந்து, தன் தாயாரைக் கண்டு நடந்தவிவரங்களனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னான்.

அவளும் தன் மகனுக்கு நேர்ந்த இன்னல்களைக் கேட்டு ஒரு பக்கம் வருத்தப்பட்டாலும், தன் சகோதரி புண்ணியவதியின் பாசப்பற்றுதலினால், அவள் தனக்காக எடுத்துக் கொண்ட முயற்சியையும் கேட்டு மனம் பரவசத்தால் புளகாங்கிதம் அடைந்தாள். அவனும் தன் பெரிய தாயார் கொடுத்தனுப்பியுள்ள நோன்புக் கயிற்றையும், பிரசாதத்தையும் தன் தாயாரிடம் கொடுத்து வணங்கினான்.

பாக்கியவதியும் அந்நோன்புக்கயிற்றைக் கையில் கட்டிக்கொண்டாள்; பிரசாதத்தை குழந்தைகளுக்கும், தன் கணவருக்கும் கொடுத்துத் தானும் உண்டாள். இது நடந்த சில நாட்களில் தன் நாடு நகரங்களை அபகரித்த அரசன், இவர்கள் முன் வந்து, நாட்டையும் பொருளையும் திருப்பிக்கொடுத்து விட்டு, சுகமாய் வாழும்படி கூறிவிட்டுச் சென்றான்.

பிறகு பாக்கியவதியும் முன்போலவே சகல சம்பத்துகளையும் பெற்று, சுகமாய்வாழ்ந்து வந்தாள். எல்லாம் தன்னால் நேர்ந்த துன்பம் என்றும், நோன்பை குறையாய் விட்டபடியால் வந்த வினை என்றும் அறிந்து, அதனால் தான் கேதாரீஸ்வரர் வறுமையைத் தந்தார் என உணர்ந்து, அது முதல் விரதத்தை மிகப்பக்தி சிரத்தையுடன் செய்து வந்தாள். ஈஸ்வர அனுக்கிரகத்தால் செல்வம் குறைவறப்பெருகி, சுகமாய் வாழ்ந்து வரலானாள்.

ஆதலால் இக்கேதாரேஸ்வரர் விரதத்தை மனப்பூர்வமாகவும், பக்திசிரத்தையுடன் செய்து வருபவர்களுக்கு ஈஸ்வரன் எல்லாச் செல்வங்களையும் அளித்து, குறைவற சந்தோஷமாக வாழ வழி வகை அளிப்பார் என்பதாகும்.

இவ்விரத சரித்திரத்தைக் கேட்பவர்களும், படித்தவர்களும், எழுதுபவர்களும், தேவானுக்கிரகத்தால் ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் பெற்று, மேன்மேலும் பெருகி, கஷ்டங்களிலிருந்து விடுபட்டு, வளமுற வாழ்வார்கள் என்பதாகும்.

பார்வதிதேவியே இவ்விரதத்தை பூலோகத்திற்கு வந்து செய்துகொண்டு அர்த்தநாரீஸ்வரி ஆனதில், இதைவிட இவ்விரதபலனை எப்படி எடுத்துரைக்க யாரால் இயலும்?

சிவமும் சக்தியும் பிரிக்க முடியாதவை; சுவாமி அம்பாள் இருவரிடத்திலும் ஒரேமாதிரி பக்தி வைக்க வேண்டும். பூரண அனுக்கிரகம் வேண்டுமானால், சதி-பதி உறவில் அம்பாளும், ஈசுவரனும், அர்த்தநாரீசுவரராக இருப்பதை எந்நாளும் மறக்காமல் பக்தி செலுத்த வேண்டும்.

அவர் 'மாதொருபாகன்', அவள், 'பாகம்பிரியாள்' என்பதை நினைவில் கொண்டு இருவரிடமும் அன்பு வைக்க வேண்டும்.

அன்று அம்பிகை திருக்கேதாரம் வந்து இறைவனை நோக்கிப் பல காலம் தவமிருந்தாள்; கடும் விரதங்களை அனுஷ்டித்தாள். அதன் பின் இறைவன் தோன்றி, அவள் விருப்பமான, உடலில் சரிபாதியாக, 'இன்று முதல் நீ என்னுள் சரிபாதி' என்று கூற, இணைந்தாள்! இருவரும் இணைந்து அர்த்தநாரீசுவரராக ஆனார்கள்.

'மாதொரு பாகன்,' 'மாதிருக்கும் பாதியான்', 'பாகம் பெண்ணுருவானான்' என்றெல்லாம் ஈசனைப் போற்றினர்.

இவ்விரதமே கேதார கௌரீ விரதம் என்று கடைப்பிடிக்கப்படுகிறது. கணவனுடன் இணைபிரியாது இனிது இணைந்து வாழவேண்டி இவ்விரதத்தை தீபாவளியினையொட்டி நோற்கின்றனர். அப்போது அம்மியையும், குழவியையும் சிவசக்தியாகக் கருதி வழிபடுகின்றனர். அம்மி இல்லாமல் குழவியும், குழவி இல்லாமல் அம்மியும் பயன்படாது; அவ்வாறே பெண் இல்லாமல் ஆணும், ஆண் இல்லாமல் பெண்ணும் வாழ்வின் பயனை அடைய முடியாது என்ற வாழ்க்கைத் தத்துவத்தை நினைவுபடுத்துவதே இவ்விரதத்தின் உட்கருத்தாகும் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்கலாம்.


இவ்விரதத்தை இருபத்தியோரு தடவைகள் செய்யும் புண்ணியவான்கள் இம்மையில் ஐஸ்வர்யங்களையும், மறுமையில் சிவானுக்கிரகமும் அடைவார்கள்.

கலசம் அலங்கரித்து வைத்து, அதன் பக்கத்திலேயே அம்மிக்குழவியையும் சந்தனம், குங்குமம், பூக்களால் அலங்கரித்து, பிராண பிரதிஷ்டை செய்து, கணபதி பூஜை முதல் ஆரம்பித்து, ஷோடசோபசார பூஜைகள் செய்து, நாள்தோறும் பூஜை செய்து, நிறைவேற்றுதல் வேண்டும்.

★★★

# ஸ்ரீ மணவாள மாமுனிகள்

- ப. முகுந்தன்



ஸ்ரீ ஸ்ரீதேவி, பூதேவி சமேத தேகளீச பெருமாள்

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மிகவும் முக்கிய மான ஆசார்ய புருஷர்களில் ஒருவர் ஸ்ரீ மணவாள மாமுனிகள். இவர் 630 ஆண்டுகளுக்கு முன் சாதாரண வருடம் ஐப்பசி மாதம் மூலநட்சத்திரத்தில் அவதரித்தார். ஸ்ரீமந் நாராயணன் இந்த பூவுலகத்தை திருத்திப் பணி கொள்ள பல அவதாரங்கள் செய்தார். இந்த அவதாரங் களில் உலக வழக்கப்படி பல குருக்களிடம் பயின்று பின்னர் பல லீலாவிபூதிகளைச் செய்தார். இராமாவதாரத் தில் விஸ்வாமித்ர முனிவரிடமும். கிருஷ்ணாவதாரத்தில் சாந்தீபினி முனிவரிடமும் பயின்றும், அவர்களிடம் உலகப்பற்று என்னும் குறையிருந்ததால் நல்ல குருவிடம் பயின்று பயன்பெறும் பேறு கிட்டவில்லையென்ற குறையுடன் இருந்தார். அந்த குறை நீங்க ஆழ்வார்கள் ஆசார்யர்களை அவதரிப்பித்துக் குறை நீங்கினார். அத் தகைய அவதாரங்களில் ஆதிசேஷன் மற்றும் ஸ்ரீராமா னுஜரின் மறு அவதாரமாக போற்றப்படும் ஆச்சார்யர் முறை தப்பாமல் பல ஆசார்யர்களிடம் கல்வி பயின்று நாலாயிரத் திவ்விய பிரபந்தம் மற்றும் இதிகாசம் மற்றும் வேத புராணங்களும் கற்று எளிய முறையில் உரை எழுதி மற்றும் காலட்சேபம் செய்து, வைணவ சம்பிரதாயத்தை பரப்பி மனிதர்களை பிறவிப்பயன் பெறச் செய்தவர் ஸ்ரீமந் மணவாள மாமுனிகள். இவரது உரை மட்டும் இல்லையென்றால் ஆற்றில் கரைத்த புளி போன்று தமிழ் வேதங்களான திவ்வியப் பிரபந்தங்கள் மறைந்து இருக் கும். இவரது வியாக்கியானத் திறமைக்கு மயங்கி திரு வரங்கம் அரங்கநாதப் பெருமான் தம்முடைய உற்சவங் களை ஒரு வருஷ காலம் நிறுத்தி வைத்து தினமும் இவரது காலட்சேபத்தை கேட்டு அருளினார்.

மணவாள மாமுனிகளின் திரு அவதாரம் உற்சவ மாக ஸ்ரீவைஷ்ணவத்திருக்கோயில்களில் கொண்டாடப் படுகிறது. திருவயிந்திரபுரத்தில் மணவாளை மாமுனி களுக்குத் தனியாக ஒரு கோயில் உள்ளது. இதில் ஐப்பசி மாதம் மகநட்சத்திரத்தில் (3.11.99) தொடங்கி மூல நட்சத் திரம் வரை (12.11.99) பத்து நாட்கள் மஹோத்ஸவம் நடை பெறுகிறது. உத்ஸவத்தில் பிரதி தினமும் இரண்டு வேளை வாகன புறப்பாடு, திருமஞ்சனம், திவ்விய பிரபந்த சேவை, வேதபாராயணம் மற்றும் உபன்யாசங் கள் நடைபெறுகிறது.

# அருளாளப் பெருமாள் எம்பெருமானார்

– திருமதி கோமதி ராகவன், எஃப்.சி.ஏ.

எம்பெருமானாருடைய ஐந்து முக்கிய சிஷ்யர்கள் கூரத்தாழ்வார், சுவாமி முதலியாண்டான், எம்பார், அருளாளப்பெருமாள் எம்பெருமானார் மற்றும் வடுகநம்பிகள் ஆவர்.

*அருளாளப் பெருமாள் எம்பெருமானார்*

இவர் கார்த்திகை மாதம் பரணி நட்சத்திரத் திருநாளன்று தொண்டை நன்னாட்டில் அவதரித்தார். ''யக்ஞமூர்த்தி'' என்கின்ற திருநாமத்தைக் கொண்ட இச் சான்றோர் அத்வைத பாண்டித்யம் பெற்றவர். மாயாவாதத்தில் கரைகண்ட ஞானம் பொருந்திய யக்ஞமூர்த்தி கங்கைக் கரையில் துறவறம் ஏற்று ஏகதண்ட சன்யாசியாக வடநாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று பல மேதைகளையும் தருக்கத்தின் கண்வென்று ''சர்வ விஜயீ'' என்ற பட்டத் துடனும் அநேக சிஷ்யர்களுடனும் அத்வைத சக்ரவர்த்தி யாக வாழ்ந்து வந்தார்.

ஒரு சமயம் இவர் காசி சேத்திரத்தில் இருக்கையில் விசிஷ்டாத்வைத நெறி காத்து வந்த எதிராஜருடைய கீர்த்தியைச் செவியுற்றார். உடையவருடன் தருக்கம் செய்து மாயாவாதத்தை நிலை நாட்டும் பொருட்டு காசியினின்று திருவரங்கம் வந்து சேர்ந்தார். எம்பெருமானாரை அவரது மடத்தில் தரிசனம் செய்து தம்முடன் வாதம் செய்ய அழைத்தார். பதினெட்டு நாட்கள் வாதம் நடைபெறும் என்றும் யக்ஞமூர்த்தி தோற்றால் உடையவரது பாதரட்சைகளைச் சுமந்து அவரது திருநாமத்தைத் தரித்துக் கொண்டு அவரது சிஷ்யராகக் கடவார் என்றும், உடையவர் தோற்றால் தம்முடைய அனைத்து நூல்களையும் துறப்பார் என்றும் பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

பதினாறு நாட்கள் மகாவித்வான்கள் ஆகிய இருவரும் சமமாக வாதம் செய்தனர். பதினேழாம் நாள் உடையவரது பிரமாணங்கள் அனைத்தையும் யக்ஞமூர்த்தி பிரதிவாதித்தார். தருக்கத்தின் முடிவில் உடையவரும் சோர்வுக்கு உட்பட்டவராய் தம்மடத்திற்கு எழுந்தருளினார். அன்றிரவு தமது திருவாராதனப்பெருமாளான காஞ்சிப் பேரருளாளனுக்கு நிவேதனம் செய்வித்து ''பெருமாளே, ஆழ்வார்கள் முதல் ஆளவந்தார் வரை ஓராண் வழியாய் வந்த விசிஷ்டாத்வைத நெறி அடியேன் காலத்தில் அஸ்தமனம் ஆகுமா? அதுவே திருவுள்ளமாகில் செய்தருள்க'' என மிகுந்த மனவேதனையுடன் விண்ணப்பித்து அமுது செய்யாமல் கண்ணயர்ந்தார். அத்திகிரி பேரருளாளரின் அன்பைப் பெற்றவர் எம்பெருமானார்.

"தென் அத்தி ஊரர் கழலிணைக்கீழ்ப்
பூண்ட அன்பாளன் இராமாநுஜனைப்பொருந்தினமே''

*(இராமாநுஜ நூற்றந்தாதி - 31)* என்றவாறு.

பேரருளாளனும் உடையவருடைய கனவில் எழுந்தருளி ''இளையாழ்வாரே, ஏன் கவலையுறுகிறீர்? உமக்கு மிகச் சிறந்த சிஷ்யனை உண்டாக்கித் தந்தோம். உம்முடைய பூர்வாசாரியரான ஆளவந்தார் அருளிச் செய்த அகண்ட மாயாவாத கண்டனத்தைச் சொல்லி வெற்றி கொள்வீர்'' என்றார்.

பதினெட்டாம் நாள் உடையவரும் பேரருளாளன் அருளிச் செய்த விளக்கத்தைத் திருவுள்ளத்தில் ஏற்றவராய் சந்தோஷத்துடன் கம்பீரமாக தருக்க கோஷ்டியில் எழுந்தருளினார். உடையவரது தேஜஸைப்பார்த்து யக்ஞமூர்த்தியும், உடையவர் சாதாரண மானுடர் அல்லர் என்றும், பெருமாளுக்கும் இவர்க்கும் பேதமில்லை என்பதையும் உணர்ந்தவராய் உடையவரது திருவடிகளிலே தெண்டன் சமர்ப்பித்து ''தேவரீருக்குத் தோற்றேன்'' என்றார். யக்ஞமூர்த்தியை உடையவர் கடாட்சித்து அருளினாலும், தருக்கத்தில் ஆளவந்தாரின் மாயாவாத கண்டனத்தைக் கூறி விசிஷ்டாத்வைத நெறியை நிலைநாட்டினார். யக்ஞமூர்த்திக்குத் திரிதண்டமும், காஷாயங்களும், தீட்சையும் அளித்து பஞ்ச ஸம்ஸ்காரமும் அருளிச் செய்வித்தார்.

திரிதண்டமென்பது உடல், மனம், வாக்கு மூன்றின் தூய்மையைக் குறிப்பது. பஞ்ச ஸம்ஸ்காரமென்பது சங்கு சக்கர இலச்சினைகளைப் புயங்களில் தரிப்பது, திருமண் காப்பு ஏற்பது, தாஸ்யநாமம் சூட்டிக்

கொள்வது, திருமந்திர உபதேசம் பெறுவது மற்றும் திரு வாராதனக் கிரமங்களைக் கற்பது.

பேரருளாளரின் கிருபையால் யக்ஞமூர்த்தி தமக்குச் சிஷ்யராகக் கிடைக்கப்பெற்றதால் ''அருளாளப் பெருமாள்'' என்றும் உடையவரது திருநாமத்தைத் தாம் சூட்டிக்கொள்வோம் என்று முன்பு யக்ஞமூர்த்தி உரைத்த தால் ''எம்பெருமானார்'' என்றும் ''அருளாளப்பெருமாள் எம்பெருமானார்'' என்கின்ற அழகிய திருநாமத்தை அவர்க்கு உடையவர் அருளினார். தம்முடைய திருவாரா தனப் பெருமாளை சேவிக்கப்பண்ணி ''இவர்தான் உம்மை நம்பக்கில் சேர்த்தருளினார்'' என்றார். திரு வரங்கம் பெரிய கோயிலில் சகல மரியாதைகளுடன் திவ்யப்பிரபந்தங்களை இவருக்கு இராமானுசர் ஓதுவித் தார். தேவராஜமுனி என்றும் தயாபாலமுனி என்றும் அருளாளப் பெருமாள் எம்பெருமானாரை அழைப்பர்.

தயாபாலமுனி அர்ச்சா அவதாரமூர்த்தியாகக் காஞ்சியிலுள்ள திருப்பாடகம் என்ற வைணவ திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கிறார். இவர் விக்கிரகம் ஸ்ரீவில்லிப் புத்தூரிலும் உண்டென்பர். தயாபாலமுனி இராமானுசரின் கருணைக்குப் பாத்திரமானவர் என்றும் வைணவத்துறவிகளின் வரிசையில் மிகச்சிறந்தவராகத் திகழ்பவர் என்னும் பொருள்பட ''யதிராஜ தயா பாத்ரம், யதி பங்க்தி விபூஷணம்'' என்று வைணவர்கள் இவரைப் போற்றித் துதிப்பர். இவரது சிஷ்யர்களில் முதன்மை யாகக் கருதப்படுவோர் வீஞ்சிமூர் திருவம்சத்தைச் சார்ந்த வைணவத்தொண்டர்கள். அனந்தாழ்வான், எச்சான், தொண்டனூர் நம்பி மற்றும் மருதூர் நம்பி இவர்களை உடையவர் ஆக்ஞைப்படி தயாபாலமுனி சிஷ்யர்களாக ஏற்றுக் கொண்டார்.

தயாபாலமுனி, உடையவர் நியமனப்படி தனி மடம் அமைத்து பகவத் கைங்கர்யம் செய்துவந்தார். பின் உடையவரது திருவடிகளிலே தெண்டன் சமர்ப்பித்து தனிமடம் தமது ஆசார்ய நிஷ்டைக்கு இடையூறாக இருக்கிறது என்றும், உடையவருடன் இணை பிரியாமல் இருக்கும் பாக்கியமே தாம் வேண்டுவது என்றும் விண் ணப்பித்தார். உடையவரும் தயாபாலமுனிவரைத் தமது மடத்திலேயே இருந்து திருவாராதனப் பெருமாளாகிய பேரருளாளனுக்குக் கைங்கர்யம் செய்துவருமாறு கடாட் சித்து அருளினார். இதன்பின் தயாபாலமுனிவர் தனி மடத்தைத் தியாகம் செய்து உடையவரது மடத்திலேயே இருக்கும் பேறு பெற்றார்.

தயாபாலமுனிவர் ''ஞானஸாரம்'' மற்றும் ''பிரமேயஸாரம்'' என்னும் இரண்டு நூல்களைத் தமிழ் மொழியில் வெண்பா இலக்கணப்படி அருளிச் செய்தார். வைணவ ஆசார்ய பரம்பரையில் தமிழ்மொழியில் முதன் முதலில் கிரந்தங்களைப் படைத்தவர் என்ற பெருமைக்கு உரியவர் தயாபாலமுனிவர். இவ்விரு நூல்களுக்கும் மணவாளமாமுனிகள் வியாக்யானம் அருளிச் செய்திருக் கிறார்.

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் திருவாய் மலர்ந்த ''ஞானஸாரம்'' அறவோர் மெய்ம்மறையாகப் புகழப்படுகிறது. ஆசார்யரை உபாயமாகப் பற்றுதல், மெய் யுணர்தல், சரணாகதி தாத்பர்யம், நிர்ஹேதுக கிருபை போன்ற ரஹஸ்யார்த்தங்களை ஸாராம்ஸமாகத் தன்னுள் அடக்கி ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் வேத சாஸ்திர தாத்பர்யங்களையும் செவ்வனே விளக்குவதாக அமைந்துள்ளது. ஞானசாரத்தில் காணப்பெறும் உவமை களைச் சிறந்த இலக்கிய வல்லுநர்கள் நுண்ணிய கவி நயமாக உகப்பர்.

மேற்கூறிய நிர்ஹேதுக கிருபையாவது ஒரு காரணத்தையும் பற்றியதில்லாமல் இருப்பதும், நாம் அடைய முனையாதிருப்பினும் தானே பிரவாகமாக வருவதுமாகிய திருவருள். இதனை இரவீந்திர நாத் தாகூர் ''கீதாஞ்சலியில்'' இவ்வாறு வர்ணிக்கிறார். ''உன்னுடைய பிரவாகமாக வரும் கிருபையை எனது இச்சிறிய கைகளால் தாங்கிக்கொள்கிறேன். வருடங்கள் செல்கின் றன. நீயும் அருள் புரிகிறாய். அதனை முழுமையாக வாங்கிக்கொள்ளும் திறமையையும் எனக்களிக்கிறாய். என்னே உன் திருவிளையாடல்'' (கீதாஞ்சலி - 1)

பிரமேயஸாரத்தில் தயாபால முனிவர் பிரணவத் தின் பொருள், ஆசார்ய கிருபையான உகார தத்வம், கர்மத்தால் விளையும் பிறத்தலாகிய இடையூறுகள், அவற்றைக்கடக்கும் மோட்சத்திற்கேதுவாகிய வழிமுறை கள், ஆசார்ய வைபவம் போன்ற புருஷார்த்த விசேஷங் களைத் தமது பரம கிருபையால் அருளிச்செய்திருக் கிறார்.

''மெய்யுணர்தல்'' என்னும் அதிகாரத்தில்
திருவள்ளுவர்
''கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார்
தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி'' (குறள் 356) என்றார்.

அதாவது சிஷ்யனுடைய உய்வினையே பல னாகக் கொண்ட சிறந்த தன்மையுடையவரும், பகவத் அனுபவம் மிக்கவரும் ஆகிய சதாசார்யன்பால் உபதேச மொழிகளைக் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பின் கண் வாராத

நெறியை எய்துவர். (பரிமேலழகர் - குறள் 356) மெய்ப் பொருள் என்பது ஞானயோகமாகும். ஒன்றை மற்றொன்றாக நினைக்கும் மாறுபட்ட அறிவாகிய அவிச்சை, அது பற்றிய அகங்காரம், அவா, அதற்கேதுவாகிய விழைவு மற்றும் வெறுப்பு இவ்வைந்தால் வரும் வினைப்பயன்களாகிய நோய்கள் ஞானயோகத்தால் கெடும். (பரிமேலழகர் - குறள் 360). இந்த ஞான யோகத்தை அளிக்கும் ஆசார்யன் இறைவனின் அவதாரமே என்கிறார் அருளாளப்பெருமாள் எம்பெருமானார்.

''மானிடவர் என்றும் குருவை மலர்மகள்கோன்
தான் உகந்த கோலம் உலோகம் என்றும் - ஈனமதா
எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும்
நண்ணிடுவர் கீழாம் நரகு'' (ஞானஸாரம் - 32)

இனி மெய்ப்பொருளாம் திரு எட்டெழுத்தை உபகரித்த ஆசார்யன் திருவடிகளே ஈஸ்வரன் திருவடிகளை விடவும் சிஷ்யனுக்குச் சிறந்த அரணாம். ஆசார்யனின் திருவடி கிருபையால் ஞான, பக்தி வைராக்யங்களை உண்டாக்கிக் கொள்ளலாம். ஆசார்யசம்பந்தம் கிடைக்காவிடில் அவை உண்டானாலும் பிரயோஜனமில்லை. (ஸ்ரீவசனபூஷணம் - 437) பகவத் கிருபைக்கு ஏதுவாக இருப்பதும் ஆசார்ய நிஷ்டையே என்கிறார் அருளாளப்பெருமாள் எம்பெருமானார்.

தீதில்லாத திருமந்திரத்தைத் தந்த ஆசார்யனின் திருவடி நிழலில் இருப்பவரது நெஞ்சில் ஈஸ்வரன் தானே விரும்பி நிர்ஹேதுகமாக நித்யாவாஸம் செய்வான் என்றும், ஆசார்ய நிஷ்டை குறைந்தவரிடத்தில் அவனும் அநுக்ரஹம் செய்யான் என்கிறார். இதனை ''உபேயநிர்தேசம்'' என்று திருநகரிப்பிள்ளை ''ரஹஸ்ய தத்வ''த்தில் போற்றுவர்.

''தேனார் கமலம் திருமாமகள் கொழுநன்
தானே குருவாகித்தன் அருளால் - மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்கும் அவன்தாளினை
உன்னுவதே சாலவுறும்'' (ஞானஸாரம் - 38)

குரு கீதையில் ''தத்பாதம் விஷ்ணு பாதம்'' அதாவது ஆசார்யனின் திருவடிகளே விஷ்ணுவின் திருவடிகள் என்றும், ''சர்வ பாப விசுதாத்மா ஸ்ரீகுரேபாத சேவனாத்'' அதாவது ஆசார்ய கைங்கர்யத்தால் சர்வ பாபமும் நீங்கிவிடுகிறது என்றும் கூறப்படுகிறது. மதுர கவியாழ்வார் ''தேவு மற்றறிரேன்'' என்றார். அதாவது தமது குருவாகிய நம்மாழ்வாரையல்லாது அவர் வேறு தெய்வத்தை அறியமாட்டேன் என்றார். அருளாளப் பெருமாள் எம்பெருமானாரும் உடையவரையே தனக்கு உபாயமாகவும் அவரது திருவடிகளையே பலனாவும் கருதி ஆசார்ய கைங்கர்யமே புருஷார்த்தமாகச் சிரமேற்கொண்டார். இதனால் அவரது சரிதையின் மேன்மையும் அளவிடற்கரியதாயிற்று. அவரும் என்றும் வணக்கத்துக் குரியவராகிறார்.

''தயாபாலமுநிம் வந்தே தேசிகாக்ரேஸரம் ஸதா'',
(குருபரம்பரை பன்னீராயிரப்படி) என்றவாறு.



அருள்மிகு தட்சிணாமூர்த்தி (தவக்கோலம்)

# த(வ)க்கோலம்

– முனைவர் வ. ஹேமா, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.

தற்காலத்தில் வண்ண ஜாலங்கள் காட்டும் செயற்கை நீர் ஊற்றுக்களை ஆங்காங்கே கண்டு மகிழ்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இயற்கை ஊற்றை நந்தியம்பெருமானின் வாய் வழியே வரச்செய்து விந்தை விளைவித்தது ஒரு சிற்பியின் நுண்ணறிவு.

அத்தகைய நீரூற்று அமைந்த இடம்தான் தேவாரத்தில் திருவூறல் எனக் குறிப்பிடப்படும் தக்கோலம்.

அடிமுடி தேடித் தோற்ற பிரமனும், திருமாலும் தவமியற்றி, ஈசன் தரிசனத்தைக் கண்ட திருத்தலம். சம்வர்த்தனர் (தேவகுருவின் தம்பி) தவமியற்றி, ஈசனின் தரிசனம் பெற்ற திருத்தலம். தாட்சாயணியும், அவள் தந்தை தட்சனும் தவமியற்றி, ஈசன் அருள் பெற்ற திருத்தலம். இவ்வாறு பலர் தவக்கோலத்தில் இருந்து அருள் பெற்ற இடமே தக்கோலம் என வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு இரு கோயில்கள் உள்ளன. வடக்கே இருப்பது கங்காதரர் திருக்கோயில். இங்குள்ள சத்யகங்கை தீர்த்தமே நந்தியின் வாயின் வழியே வந்து கொண்டிருந்தது. தற்போது நீர் வரத்து நின்றுவிட்டது. காரணம் பல பம்புசெட்டுகள் விவசாயத்திற்காக நீரை உறிஞ்சுவதாகும்.

தெற்கே உள்ளது உமாபதீஸ்சுவரர் திருக்கோயில். இவரை ஜலதாரேஸ்வரர் என்றும் அழைப்பர். இறைவி கிரிராஜ கன்னிகை என்றும், மோகனவல்லி என்றும் அழைக்கப்பெறுகிறார். தீர்த்தம் நந்தி தீர்த்தம். அருகே கல்லாறு ஓடுகிறது.

மூன்று நிலைகள் உள்ள ராஜகோபுரத்தின் சிற்பச் சிறப்பு பாராட்டுதற்குரியது. பார்த்து மகிழ்தற்குரியது. மார்க்கண்டேயனுக்காக, காலனை ஈசன் காலால் உதைக்கும் சிற்பக்காட்சி தத்ரூபமானது.

சுவாமி சந்நிதி வாயிலில் துவாரபாலகர்கள் அழகான கம்பீரத் தோற்றத்துடன் காட்சி தருகின்றனர். உள்சுற்றில் நான்கு அழகான கோஷ்ட விக்ரகங்களைக் காணலாம். அவை புதிய கோணங்களில் தனிச்சிறப்புடன் அமைந்தவை.

ஒரு காலைத் தொங்கவிட்டு, மற்றொரு காலை பீடத்தின் மீது மடித்து வைத்து, சற்றே தலையைச் சாய்த்து மாணவர்களை அடக்கியாளும் பாவனையில் 'உத்கடி' ஆசனத்தில் அமர்ந்து காட்சி தருகிறார் தட்சிணாமூர்த்தி. இது போன்ற கோலத்தை வேறு எங்கும் காண இயலாது.

அடுத்தது நான்முகப் பிரமன், கண்டியூர் பிரமனை விட அழகிய கோலம் எனப் போற்றப்படுபவர். நான்கு முகங்களில் மூன்று தெரியும். ஒன்று பின்புறம் மறைந்திருக்கும்.

தென்முகக் கடவுளும், நான்முகக் கடவுளும் அமர்ந்திருக்க, துர்க்கை நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். மகிடாசுர மர்த்தினியாக அல்லாமல், சாந்த துர்க்கையாக விளங்குகிறார். வலக்காலை, வேணுகோபாலன் போல் ஊன்றி, இடக்கையை இடுப்பில் வாவகமாக வைத்து ஒயிலாக நிற்கிறார்.

சோழர் காலச் சிற்ப அமைதியோடு விளங்கும் உமையம்மையின் திருமேனி கொஞ்சும் அழகு கொண்டது. அற்புத முத்திரை தாங்கி, புன் முறுவல் பூத்த முகத்தினளாக விளங்குகிறார்.

இறைவனை நோக்கிப் பலர் தவக்கோலத்தில் இருந்ததால் இவ்வூரைத் த(வ)க்கோலம் என்றனர். ஆனால் கடவுளருக்குத் தக்க கோலங்களைச் சிற்பிகள் வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அம்பிகை வடக்கு நோக்கி இருப்பதும் ஒரு சிறப்பு அம்சம்.

மேலும், துர்க்கை, இலட்சுமி, சரசுவதி ஆகிய மூவருக்கும் இத்திருக்கோயிலில் உற்சவ மூர்த்தங்கள் (பஞ்ச லோகப் படிமங்கள்) உள்ளன.

வரலாற்றில் இடம்பெற்றது தக்கோலப் போர். திருஞானசம்பந்தர் பாடலில் இடம் பெற்றவர் ஊறல் அமர்ந்த பிரான். அற்புதச் சிற்பங்களும், கல்வெட்டுக்களும், திருக்கோயிலில் இடம்பெற்றுள்ளன. புராண வரலாறுகள் ஏராளம்.

இப்படிப் பலவகையாலும் சிறப்புப் பெற்ற தக்கோல தரிசனம், திருமணம், மகப்பேறு முதலிய பிரார்த்தனைகளையும் நிறைவேற்றி வைக்கிறது என்பதனால் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் தக்கோலம் வரத் தொடங்கியுள்ளனர்.

சென்னையிலிருந்து *91, 91*B, *107, 138* ஆகிய பேருந்துகள் தக்கோலம் செல்கின்றன. இரயிலில் செல்வோர் அரக்கோணத்தில் இறங்கி, பேரம்பாக்கம் (தக்கோலம் வழி) பேருந்தில் சென்று தக்கோலம் அடையலாம்.

''ஆடியது ஆலங்காடு''
''அமர்ந்தது திருவூறல்''
''மணந்தது மணவூர்''

என்று கூறும் பழக்கம் இப்பகுதியில் பிரபலமாக உள்ளது. நாமும் ''திருவூறல் அமர்ந்த பிரானை'', தரிசித்து மகிழ்வோமாக!

★★★

# கம்பரின் இராமாவதாரம்

## 2. அயோத்தியா காண்டம்

### 1. யாவும் உன் வயத்ததே

இளமை என்றும் நில்லாது. முதுமை வந்து விடும். இளமையாயுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இயன்றவகையில் யாவருக்கும் நன்மை செய்து முதுமையில் ஓய்வு பெற்று இறைவனை நினைத்து நமக்கும் நற்கதி கிடைக்கும்படியான காரியங்களைச் செய்தல் வேண்டும். உடல் தளர்ந்து வேலை செய்ய முடியாத நிலையில் மனம் ஒருமைப்படத் தெய்வீக சிந்தனையில் ஈடுபட வேண்டும். மக்களுக்குச் சேவை செய்து மன நிம்மதியடைந்து, பூரா நேரமும் தெய்வ சிந்தனையில் ஈடுபட வேண்டும்.

அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசாண்ட மன்னவனான தசரதர் மன்னுயிருக்காக உழைத்துச் சேவை செய்து தன்னுயிருக்கு நற்கதி தேட நினைந்து தன் மந்திரிகளையழைத்துப் பேசினார். ''இராமபிரான் பிறந்து வளர்ந்து அரசைக் கைக்கொள்ளும் பருவமடைந்துவிட்டான். இனி நாட்டை ஆள வேண்டியது அவனது கடமை. வயது முதிர்ந்தும் பதவியை விட வில்லையே என உலகம் என்னை இகழும்படி நேரலாமா? சீதாராமர்களின் திருமணம் கண்டுகளித்த நான் சீதாராமர்கள் அரசை ஏற்கும், திருமுடி சூடும் நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க வேண்டும். ஆதலால் இராமபிரானுக்கு இவ்வரசையளித்து, பேதமையே நிறைந்த இப்பிறப்பை நீக்குவதற்கு காடு சென்று தவம் செய்யவிரும்புகிறேன்: இதுபற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று மந்திரிகளிடம் பேசினார்.


ஆதலால் இராமனுக்கு அரசை நல்கி, இப்
பேதமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்கு
யாது நுங்கருத்தென இனைய கூறினான்.

சூரியகுலத்தவர் மறந்தும் பொய் கூறமாட்டார். எனவே மேற்கண்ட பாடலுக்கு பேது அமை தாய் = கூனியால் மனப்பேதமடைந்த தாயான கைகேயி. வரும் : (கொடியவார்த்தை கூற) நேரும் : ஆதலால் இரா மனுக்கு இவ்வரசை நல்கி = இவ்விடத்தில் இல்லாதவனான பரதனுக்கு அரசையளித்து, பிறப்பை நீக்குவான் = என் உயிர் நீங்கவும் மாது அவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்கு = சீதாபிராட்டியான மாதைப் பிரியும் தன்மை ஏற்படும் பொருட்டு இராமன் காடுபுகுவன் எனப் பரதன் நாடாளவும் இராமன் காடாளவும் நான் வானாளவும் நேரும் என நடக்கப்போகும் நிகழ்ச்சியை தொனிப்பொருளாக வைத்துப்பாடினார் கம்பர் என்பர்.

இதைக் கேட்ட சபையினர் இன்பமும் துன்பமும் அடைந்து எவ்விதமான விடையும் கூற முடியாத நிலையிலிருந்தனர். திருமுடி சூடி அரசனாக இராமபிரான் விளங்கப்போகிறான் என்ற எண்ணம் இன்பத்தையும் தசரதர் திருமுடியைத் துறந்து காடு செல்ல வேண்டிய நிலைபற்றித் துன்பமும் கொண்டனர். இராமபிரான் திருமுடி சூடலாமே எனக் கூறினால் தசரதர் காடுசெல்லலாம் என ஒப்புக் கொண்டதாக நேரும். தசரதரின் பிரிவு தாங்க முடியாதது எனக் கூறினால் இராமன் திருமுடி சூட வேண்டாம் என்று கூறியதாக ஆகிவிடும். இந்த நிலையை இரண்டுகன்றுகளைப் பெற்றதாய்ப்பசு ஒரே நேரத்தில் இரண்டு கன்றுகளுக்கும் பால் கொடுக்க முடியாது தவிக்கும் நிலையை ஒத்திருந்தது என இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென இருந்தார் என நயம் படக்கூறுகிறார் கவிஞர்.

எவரும் எந்தக் கருத்தையும் வெளிப்படப்பேச முடியாத நிலையில் குலகுருவான வசிட்டர் பேசுகிறார். ''அரசனே! உன் முன்னோர்கள் தருமம் தவறாது அரசு புரிந்து பெருமையடைந்த போதிலும் குணத்தினால் உயர்ந்த வள்ளலான இராமபிரானை மகனாக அடைந்த தனிச்சிறப்பு உனக்குத்தான். தருமமூர்த்தியான நீ தக்க நேரத்தில் தகுந்த செயல்பற்றி நினைத்தாய். எல்லா விதமான வேள்விகளும் புரிந்த நீ, தவம் செய்ய வேண்டுமென விரும்புவது மிக நேர்மையான காரியம். நீ தவஞ் செய்வதற்காகக் காடுசென்றால் பூமாதேவிக்குக் கண்ணை இழந்தமாதிரியான துன்பம் தான். ஆனால் உன்னுடைய சிங்காசனத்தில் இராமபிரான் அமர்ந்தால் பூமாதேவிக்குத் துன்பமே கிடையாது. சீதாபிராட்டியும் பட்டத்து அரசியாக இருக்கத்தக்க குணவதி. எனவே நீ தவஞ்செய்யக் காடு செல்ல நினைத்தது தக்க காரியமே'' என வசிட்டர் நேர்மையான வார்த்தைகளைக் கூறினார். ஒரு குருவின் கடமை நேர்மையாக ஒளிக்காது கூறவேண்டியது என்பது குறிப்பு. ''உன் மகன் அரசையேற்று நடத்த முழு தகுதி பெற்றவன்'' என வசிட்டர் கூறியபோது இராமபிரானை மகனாகப் பெற்றபோது கொண்ட மகிழ்ச்சியை அடைந்தார் தசரதன்.

## ''திருக்கோயில்'' வாசகர்களுக்குத் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்து மகிழ்கின்றோம்



ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

என்ற குறளின் கருத்தை ஒட்டிக் கூறினார். பெண்ணியல்பால் தானாக அறியாமையின் 'கேட்டதாய்' எனக் கூறினார் என்பது பரிமேலழகர் உரை. தாய் போன்ற உவகை கொண்டார் என அளவில்லாத தாயின் மகிழ்ச்சி கூறினார் வள்ளுவர். கம்பனே ''மகனைப்பெற்ற அன்று ஏற்பட்ட மகிழ்ச்சியையும், மிதிலையிற் சென்று சிவ தனுசை வளைத்து வென்றதுபற்றி கேட்ட மகிழ்ச்சியையும், பரசுராமரைத் தன் மகன் வென்றான் எனக் கேட்ட போது ஏற்பட்ட மகிழ்ச்சியையும் மீறி 'தன் குலகுருவான வசிட்டர் இராமபிரான் மேன்மையானவன்' என்ற சொல் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். குருவின் பாராட்டு மிக மிகச் சிறந்ததன்றோ!

குலகுருவான வசிட்டர் பேசியபின் சுமந்திரன் என்கிற மந்திரி ''இராமபிரான் அரசை ஏற்கப்போகிறார் என மகிழ்ச்சி கொள்ளும் மனம், தங்களது பிரிவு என்ற சொல்லை கேட்கும் போதே துன்பமான சூட்டை உண்டாக்குகிறது. இளவரசன் அரசைக் கைக்கொண்டால் மூத்த அரசன் காடு சென்று தவஞ் செய்ய வேண்டுமென்பது தருமத்தின் நியதி. தங்களை எங்களிடமிருந்து பிரிக்கும் தருமத்தை நொந்து கொள்ளுவது தவிர வேறு வழியேயில்லை. தருமத்தை எவ்வாறு மாற்றுவது? அரசே! அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் காரியமான இராமன் திருமுடி சூடும் விழாவை நடத்தி மகிழ்வோம். பின்னால் மற்றதைப் பார்த்துக் கொள்வோம்!'' எனக் கூறி நல்ல காரியத்தைத் தாமதப் படுத்த வேண்டாம் எனக் குறிப்புடன் முடித்தார். தசரதர் ''மெத்த மகிழ்ச்சி! உடனே நீ சென்று இராமபிரானை அழைத்துவா!'' எனச் சுமந்திரனுக்குக் கட்டளையிட்டார்.

சுமந்திரன் இராமபிரானது அரண்மனையை அடைந்து பெண்ணின் இன்னமுதன்னவள் தன்னொடும், பிரியாவண்ண வெஞ்சிலைக் குரிசிலான இலக்குவனுடனும் இராமபிரான் இருப்பது கண்டுகளிப்படைந்தார். சீதாபிராட்டியை இன்னமுது என்னக் குறிப்பிட்ட கம்பர் இலக்குவனைப் பிரியாவண்ண வெஞ்சிலைக் குரிசில் எனக் கூறி, சீதா பிராட்டியாவது இராமபிரானைப் பிரிவாள். இலக்குவன் என்றும் பிரியவே மாட்டார் என்று பின் நேரக்கூடிய நிகழ்ச்சியைத் தொனிப்பொருள் வைத்துக் காட்டினார். தந்தையழைக்கிறார் என்ற செய்தியைச் சுமந்திரன் மூலம் அறிந்த இராமபிரான் அரச சபையை அடைந்து முதலில் வசிட்டரை வணங்கி (குருவின் ஏற்றத்தை மறவாது காட்டும் கம்பனின் பெருமை தான் என்னே!) பின் தந்தையான தசரதனை வணங்க, தசரதர் தன் மகனான இராமபிரானைத் தழுவிக் கொண்டார். ஏன்? இவ்வளவு பெரிய உலகைக் கட்டியரசாட்சி செய்த தன் மார்பினாலும் தனது தோள்களாலும் இராமபிரானின் தோள்களையும் மார்பையும் அளந்து பார்த்தான் என்கிறார் கவிஞர்.

''இராமபிரானே! நான் மூப்பினால் தளர்ந்து விட்டேன். இனி இவ்வுலக அரசாட்சியை நீ சுமந்து நான் தவஞ்செய்து நற்கதியடைய நீ உதவவேண்டும்'' என்ற போது இராமபிரான் தனக்கு அரசு கிடைக்கப்போகிறது என மகிழவுமில்லை. இது எனக்கு எதற்கு என இகழவுமில்லை. தந்தை சொற்கேட்டு நடப்பது தன் கடமை என

அவரது கட்டளைக்கு இணங்கத் தீர்மானித்தார். இராம பிரான் தனது அரண்மனைக்குத் திரும்பினார். சபையி லிருந்த ஒவ்வொருவரும் தத்தமக்கு அரசு கிடைத்த மாதிரி மகிழ்ச்சி கொண்டனர். அந்நிலையில் தசரதர் சபையினரைப் பார்த்து ''இராமனுக்கு திருமுடி சூட்ட லாம் என நான் அன்பினால் கூறிய சொல்லை, நீங்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு கூறிய பதில், மனதாரக் கூறினீர்களா, என் மனத்திற்கு ஏற்றவாறு கூறினீர்களா? அல்லது இது தகுதியான செயல் என எண்ணிக் கூறி னீர்களா?'' எனக்கேட்க, மக்கள் ''ஊரிலுள்ள நீர் நிலை நிறைவதையும், பலருக்கும் உதவக் கூடிய மரம் பழுத்து விளங்குவதையும், மழை பொழிவதையும், ஆற்றில் நீர் பெருகி வருவதையும் வேண்டாமென யாராவது தடுப் பார்களா? அது போல் தருமநாயகனான இராமன் முடி சூடுவதை வேண்டாம் என எவராவது கூறுவார்களா? என்றனர்.

ஊருணி நிறையவும், உதவும் மாடுயர்
பார்கெழுபயன்மரம் பழுத்தற்றாகவும்,
கார்மழை பொழியவும், கழனி பாய் நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின்றார்கள் யார்?

இந்தப் பாடலில் வள்ளுவரின்

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு

*(உலகத்தவர் விரும்பும் நல்லோனாகிய அறிவாளியின் செல்வம், ஊரின் நடுவில் அனைவரும் பருகுவதற்குரிய குளம் நீர்நிறைந்தது போலாகும்)*

பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயன் உடையான் கண்படின்

*(ஈகைக்குணமுடைய நல்லோனிடம் உள்ள செல்வம் பழமரம் ஊரின் நடுவில் பழுத்துப் பயன் தருவது போலாகும்)*

என்ற வள்ளுவரின் வாக்கை அடியொற்றி வருகிறது. வள்ளுவருடையது நீதிநூல். நீதி வழி நடந்த நல்லோ னுடைய வரலாற்று நூல் கம்பருடையது. தமிழுக்கு க.தி இருவர். க என்பது கம்பன். தி என்பது திருவள்ளுவர் என ஆன்றார் கூறுவர். இருவரும் காட்டிய வழி நடந்து இன்புற்று அனைவரும் வாழ இறைவன் அருளட்டும்!

சபையில் நடைபெற்ற சம்பாஷணைகளைக் கேட்ட நான்கு பெண்கள் களிப்பு மிகுதியில் ஆடிப்பாடிக் கொண்டு கௌசலையின் அரண்மனையை நோக்கி ஓடி னர். கௌசலை அவர்களிடம் அவர்களது மகிழ்ச்சியின் காரணத்தைக் கேட்க, அவர்கள் தம்மையறியாமலே ''உன் மகன் இராமனுக்குத் தசரதர் முடி சூட்டி அரசனாக்கு கின்றார்'' என்றனர்.

அந்த நாட்டு மக்களைப் போலவே அரசியான கௌசலைக்கும் ''மகன் மன்னவனாக முடி சூடுவது சிறப்புத்தான்! ஆனால் தசரதர் நாடு துறந்து காடு சென்று விடுவாரே!'' என்று ஒரு வேதனை ஏற்பட்டது.

எது நடந்தாலும் தெய்வம் காக்கும் என்பது நம் முன்னோர்களின் கொள்கை, எனவே கௌசல்யாதேவி, சுமித்திரையுடன் சூரிய வம்சத்தின் குலதெய்வமான திருமாலின் திருக்கோயிலையடைந்தார். இராமபிரான் உதித்த சூரியவம்சத்தின் குலதெய்வமானதிருமால் இன்று திருவரங்கம் பெரிய கோயிலில் உள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமான் என்றும் சூரிய வமிச முதல்வர்களில் ஒரு வரான இட்சுவாகு மகாராஜன் பூசனை செய்த திருவுரு வம் என்பதால் இட்சுவாகு குலதனம் என்றும் திரு வரங்கப் பெருமாளைக் குறிப்பிடுவர்.

தெய்வம் அடியவர்கட்கு நல்லதே செய்யும். குழந்தைக்கு என்ன தேவை எனத் தாய் அறியமாட்டாளா? நாம் கேட்க வேண்டுமா? எனக்கு என்ன தேவை என உனக்குத் தெரியும். இறைவனே! நீ நல்லதே செய்வாய். நான் கட்டளையிடலாமா? கேட்கலாமா? என நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகம். என்றார் மணிவாசகர்.

அந்த முறையில் கௌசலை ''என் மகனுக்கு அருள் செய்வது இனி உன் பொறுப்பு.'' எனப் பூரணமாக அடைக்கலம் புகுந்து வேண்டிக் கொண்டாள்! அப்படி வேண்டிக் கொண்டு வணங்கியவள் ஒரு சாதாரணப் பெண் அல்ல! உலகையெல்லாம் தன் வயிற்றுள் வைத்து அடக்கும் பெருமானைத் தன் வயிற்றில் குழந்தையாகச் சுமக்கும் பெரும் புண்ணியம் செய்தவள்!'' என்கிறார் கம்பர்.

என் வயின் தரும் மைந்தற்கு இனி அருள்
உன் வயத்தது' என்றாள்: உலகு யாவையும்
மன் வயிற்றின் அடக்கின மாயனைத்
தன் வயிற்றின் அடக்கும் தவத்தினாள்

இராமனைப் பெற்ற தாயே தனக்கு வேண்டுமென இறைவனிடம் எதையும் கேட்டு வேண்டிக் கொள்ள வில்லை. யாவும் அவன் செயல் என வழி காட்டினார்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

என அப்பர் பெருமானும் அதே வழி நடந்தார். நாமும் இறைவனை அதே நிலையில் தொழுது வாழ்வோமாக.

*(தொடரும்)*

★★★

# கந்தர் சஷ்டி விரதம்

– கலைமாமணி அருளரசு மாசிலாமணி

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் கீர்த்தி பெற்றது திருச்செந்தூர், இங்கு மூலவர் (பால சுப்பிரமணியர்) தவக்கோலத்தில் கடற்கரை ஆண்டியாகக் காட்சி தருகிறார். ஆறுமுகப் பெருமானோ இச்சா, கிரியாசக்தி என்னும் இரு மனைவியரோடு செந்திலாண்டவனாகக் காட்சி தருகிறார். கடலும், நாழிக்கிணறும் சிறந்த தீர்த்தங்கள். ஆணவச்சூரனை அழித்த இடம் ஆதலின் சஷ்டி நோன்பு கொள்ளச் சிறந்த இடம் திருச்செந்தூரே யாகும்.

உண்ணாநோன்பு உடலுக்கு நல்லது. ஆன்மாவுக்குப் பலம் தருவது. எல்லாச் சமயங்களும் இதைக் கடைப்பிடிக்கின்றன. முருகனுக்குரிய விரதங்கள் மூன்று. அவை வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம். இவற்றுள் கந்தபுராணம் கந்தசஷ்டி விரதத்தை 'ஒப்பரும் விரதம்' என்று புகழ்கிறது.

கந்தபுராணம் நம் சொந்தப் புராணம். ஆணவம் கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களால் கட்டப் பட்டது. ஆனைமுகச் சூரனை முருகன் வெல்வது மாயையை ஒழிப்பதாகும். சிங்கமுகச் சூரனை வெல்வது கன்மத்தை ஒழிப்பதாகும். சூரபதுமனை வெல்வது ஆணவத்தை (நான் எனது என்னும் அகங்காரத்தை) ஒழிப்பதாகும்.

உண்ணா நோன்பு கொள்ள ஆணவம் அடங்கும். ஆன்மா ஆண்டவனோடு ஒன்றுபடும். இந்தத் தத்துவத்தை விளக்குவதே சஷ்டி திருவிழா.

## விரதம் கொள்ளும் முறை

சஷ்டி விரதமிருப்பவர் ஆறு நாட்களும் காலையில் நீரில் மூழ்கி, சந்தியாவந்தனம் முடித்துத் தியானத்தில் அமர்ந்து அக்கினி, கும்பம், பிம்பம் மூன்றிலும் முருகனை எழுந்தருளச் செய்து வழிபட வேண்டும். திருமுருகன் புகழ்பாடி குளிர்ந்த நீர் பருகி உபவாசம் இருத்தல் வேண்டும். பெண்ணாசையை மறந்தும், பகலில் தூங்காமலும் இருத்தல் வேண்டும். இது கந்த புராணம் கூறும் முறை.

## உண்ணா நோன்பை எப்படி முடிப்பது?

உண்ணா நோன்பை முடிக்கும்போது, அவசரப்பட்டு வயிறு புடைக்க உண்ணலாம் என்று எண்ணக் கூடாது. திரவ உணவே, முதலில் அருந்த வேண்டும். பழச்சாறு அருந்தலாம். அதுவும் குறைந்த அளவே அருந்த வேண்டும். ஆறுமணி நேர இடைவெளி விட்டு ஆரஞ்சு அல்லது திராட்சைச்சாறு முதலிரு நாட்கள் அருந்தி, அதன்பின் சிறிதளவு திட உணவைச் சிற்றுண்டியாகக் கொள்ளலாம். இதைப் படிப்படியாக அதிகரிக்க வேண்டும். மலச்சிக்கல் செய்யாத சீரணிக்கத் தகுந்த எளிய உணவுகளை உண்பது நல்லது. உணவை நன்றாக அரைத்து மென்று உண்டால் கொஞ்சமாக இருந்தாலும் போதும்.

உண்ணா நோன்பை முடித்தபின் ஒரு வாரம் வரை உணவுக் கட்டுப்பாடு அவசியம். புளிப்பு உணவுகள் கொழுப்புப் பொருள்கள், எண்ணெய்ப் பதார்த்தங்கள் முதலியவற்றை ஒரு வாரம் வரை உண்ணாதிருப்பது நல்லது. அப்படி இருந்தால் உண்ணா நோன்பு, ஒரு நல்ல மருந்தாக அமைந்து முழுப்பயன்கிட்ட வாய்ப்புண்டு.

## உண்ணா நோன்பின் பயன்கள்

உண்ணா நோன்பினால் ஏற்படும் பயன்கள் யாவை?

உண்ணா நோன்பினால் அளவற்ற பயன்கள் ஏற்படுகின்றன.

உணவிலிருந்து சில நாட்கள் விடுபடுவதால் உடலின் ஒவ்வோர் உறுப்பும் தூய்மையுறுகின்றது. கண் நல்ல பார்வை பெறுகிறது. காது நன்றாகக் கேட்கிறது; கை கால்கள் நல்ல இயக்கம் பெறுகின்றன: உடலியக்க முறைக்கு ஒரு விடுமுறை கிடைப்பதால் உள்ளுறுப்புகள் தூய்மையுறுகின்றன.

உண்ணா நோன்பினால் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் உணவுச் சத்துகள் காலியாகின்றன.

உண்ணா நோன்பின் போது முதலில் கொழுப்புப் பொருள்கள் கரைகின்றன. அதன்பின் கிளைகோஜனாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் சர்க்கரைப் பொருள்களும் புரதப் பொருள்களும் கரைந்து உடலில் கலக்கின்றன. உடலின் எடையில் கால் பாகம் குறைவது வரை இப்படி நடைபெறுகிறது.

உடலின் சுமை குறைவதால் மிகக் கடுமையான நோய்களைக்கூட உண்ணா நோன்பின் மூலம் நீக்கி விட முடியும்.

உண்ணா நோன்பின் போது, உடலில் நோயுற்ற திசுக்களே முதலில் கரைக்கப்படுகின்றன.

கொழுத்த உடல் கொண்ட மனிதன், உண்ணா நோன்பின்போது மறைமுகமாக உண்டு கொண்டே இருக்கிறார். உள்ளுறுப்புக்களை வீணாகச் சுற்றியிருந்த பகுதிகள் கரைக்கப்படுகின்றன.

உண்ணா நோன்பு மிகவும் எளிய, ஆனால் சிறப்பான ஊட்டச் செயலாக அமைந்து உடலைக் காக்கிறது.

உண்ணா நோன்பின் போது உடல் ஓய்வடைகிறது. எல்லா உறுப்புகளுக்கும் அமைதி கிட்டுகிறது. நரம்புகள் தளர்ச்சி நீங்குகின்றன. வெப்பநிலை மாறி தண்மை ஏற்படுகிறது.

கழிவுப் பொருள்களை உடலிலிருந்து வெளியேற்ற இயற்கையான வழிகளில் உண்ணா நோன்பு மிகவும் சிறந்ததாக அமைந்திருக்கிறது.

உண்ணா நோன்பின் போது இரத்தமும் நிணநீரும் தூய்மையாகக்கப்படுகின்றன. காம உணர்வு தணிகிறது.

உண்ணா நோன்பின் போது தூய நினைவுகள் வளர்கின்றன. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற ஆய்வுநிலை நினைவு கூரும் சக்தி, இணைத்துக்காணும் அறிவு அதிகமாகிறது.

உண்ணா நோன்பினால் இளையவரும், முதியவரும் புதுப்பிக்கப்படுகிறார்கள். உடல் உறுப்புக்களில் மாத்திரம் அல்லாமல், உடலியல் செயல்களிலும் இது நிகழ்கிறது.

**வேள்விக்கூடம்**

வேள்விச் (புகை) சாலையிலே அக்கினி கும்பம் பிம்பம் ஆகிய மூன்றிலும் முருகனை எழுந்தருளச் செய்கின்றனர். செந்தில் நாயகர் (மூலவரின் பிரதிபிம்பம்) வள்ளி தெய்வானை நாச்சிமாரோடு பிம்பமாக எழுந்தருளுகிறார். அவருக்கு முன் மூன்று கும்பங்கள் (நடுவில் முருகன் : இருபுறம் தேவிமார்) மேடையில் உள்ளன. கும்பங்களுக்கு முன்னே ஓமத்தீ வளர்த்து அதில் முருகனை எழுந்தருளச் செய்து அபிஷேகப் பொருள்கள் பிரசாத வகைகள் மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை அக்கினியில் படைப்பது சிறப்பு. மருந்துப் பொருள்களின் வேள்விப் புகையை உட்கொள்வது உடலுக்கு நல்லது.

யாகத்தை நிறைவு செய்யும் போது 'பூரணாகுதி' என்று ஒரு தட்டில் பட்டு, வெற்றிலை பாக்கு, நவமணிகள், தங்கம், வெள்ளி, தேங்காய், முதலியவற்றை வைத்து நாதசுரம் பஞ்சவாத்தியம் வேதம் முழங்க அக்கினியில் இடுவர். (பூரணாகுதி என்றால் வேள்வி நிறைவு)

சுற்றிலுள்ள கும்பங்கள் தேவர்களையும் வேதங்களையும் குறிக்கும். அக்கினியின் முன் சிவன் பார்வதிக்குரிய கும்பங்களும் உண்டு. மேடையில் ஒரு பெட்டியில் சஷ்டித் தகடுகள் வைக்கப்பட்டிருக்கும். அவை ஆறாவது நாள் இரவில் விற்பனைக்கும் கிடைக்கும்.

**திருவுலா**

உச்சிக்காலத் தீபாராதனை முடிந்ததும் யாக சாலையில் தீபாராதனை நடைபெறும். பின் செந்தில் நாயகர் எழுந்தருளுவார். வேல் வகுப்பு, வாள் வகுப்புப் பாடி பக்தர் புடைசூழ வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. சண்முகவிலாசத்தில் அவரை எழுந்தருளச் செய்து தீபாராதனை நடைபெறும்.

**சாயாபிஷேகம்**

சஷ்டியன்று இரவில் செந்தில் நாயகரை 108 மகா தேவர் முன் (இரண்டாம் பிரகாரத்தில்) அமர்த்தி யாக சாலையிலுள்ள கும்பத்தின் நீரைக்கொண்டு வருவர். செந்தில் நாயகர் முன் கண்ணாடியைப் பிடித்து கண்ணாடிக்கு முன் அபிஷேகம் நடைபெறும். இது சாயா (நிழல்) அபிஷேகம் எனப்படும்.

**திருமணம்**

ஏழாம் நாள் தெய்வானை திருமணம். அன்று மாலை குமரவிடங்கப் பெருமான் (ஆறுமுகப் பெருமானின் பிரதி பிம்பம்) திருமணத்திற்கு எழுந்தருளுவார். மாலையில் தெற்குரதவீதியில் காட்சி கொடுத்து மாலை மாற்று நடைபெறும். இரவிலே திருமண நிகழ்ச்சி கோவிலில் நடைபெறும்.

**சிறப்பு**

ஆறுமுகப்பெருமானைப் பன்னிரண்டு கைகளோடு (மற்ற நாட்கள் கைகள் துணிகளால் மூடப்பட்டிருக்கும்) இந்த ஆறு நாட்கள் மட்டுமே தரிசிக்கலாம்.

★★★

# வினாவும் விடையும் (பொதுவானவை)

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A. D.Litt., Ph.D .

1) ஏழு சுரங்கள் எழுப்பும் இசைத்தூண்கள் எங்குள்ளன?

2) ஏழு முறை எதிரொலிக்கும் மதிலமைப்பு எங்குள்ளது?

3) ''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், மறுபடி தருமம் வெல்லும்'' இதை உரைத்த கவிஞர் யார்?

4) பஞ்ச பூதத் தலங்களில் வாயுத்தலம் எது?

5) பாலை நிலத் தெய்வம் யார்?

6) கலியுகத்தைப் பரிகசித்து நீலகண்ட தீட்சிதர் இயற்றிய நூல் எது?

7) துருவாச முனிவரின் சிறப்புப் பெயர் என்ன?

8) 'சிருங்கார பட்டாரகர்' என்பவர் யார்?

9) காயத்திரி மந்திரத்தின் ரிஷி யார்?

10) ஐப்பசி நீராடல் சிறப்பாக நடைபெறும் தலம் எது?

11) திருவான்மியூர் மற்றும் திருவொற்றியூரில் சமாதியடைந்த மகான்கள் யாவர்?

12) அர்த்த நாரீசுவரத் தலம் எது?

13) 'கௌட தேசம்' தற்போது எந்த மாநிலமாகியுள்ளது?

14) கௌடபாதர் யார்?

15) எந்த நூலுக்கு சங்கரர், இராமானுஜர், மத்வர் மூவரும் உரை (பாஷ்யம்) எழுதியுள்ளனர்?

16) சிவன், திருமால், அனுமார் ஆகிய மூவரின் சகஸ்ர நாமத்தில் வரும் பெயர் எது?

17) சிவன் - சக்தி - திருமால் இவர்களின் சாம்யம் (சமநிலை) பற்றிக் கூறும் நூல் எது?

18) அதனை இயற்றியவர் யார்?

19) தாமிரபரணியின் மற்றொரு பெயர் என்ன?

20) கம்பர் இயற்றிய இரு அந்தாதிகள் எவை?

21) பூதநாத உபாக்யானம் எந்த தெய்வத்தைப் பற்றி உரைக்கிறது?

22) மிருகண்டு முனிவரின் குமாரர் யார்?

23) பதஞ்சலி இயற்றிய மருத்துவ நூலின் பெயர் என்ன?

24) பாரதி பெண்மைக்கு ஏற்றம் அளித்திட உந்துதலாய் இருந்தவர் யார்?

25) இருவகை ஞானங்கள் எவை?

26) மூவகை இடர்கள் எவை?

27) கங்கை கொண்ட சோழபுரத்து நவக்கிரகங்களின் தனிச்சிறப்பு என்ன?

28) திருவாரூர் தவிர, வேறு எந்த ஊரில் கமலாலயம் என்ற குளம் உள்ளது?

29) அஷ்டபதியை இயற்றியவர் யார்?

30) அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

31) பிரகலாத சரித்திரத்தை ஆங்கிலத்தில் இயற்றிய வங்கக் கவிஞர் யார்?

32) வேதங்களைப் பதிப்பித்த ஜர்மானியர் யார்?

33) ''அறிவியலும் சமயமும் இணைந்தே செல்ல வேண்டும்'' எனக் கூறிய விஞ்ஞானி யார்?

34) இராம கிருஷ்ண பரமஹம்சரின் இயற்பெயர் என்ன?

35) ஆம்ஸ்ட்ராங் இப்போது எந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்?

36) புவன கிரியில் அவதரித்த மாத்வ ஆச்சார்யர் யார்?

37) சமாதி அல்லது அதிஷ்டானத்தை மாத்வ சம்பிரதாயத்தில் என்ன பெயரில் குறிப்பிடுவர்?

38) சென்னையில் விவேகானந்தர் தங்கியிருந்த இல்லம் எது?

39) திருமாலும் சிவனும் எதிர் கொள்ளும் 'சந்திப்பு உற்சவம்' எங்கு நடைபெறுகிறது?

40) சிவ பெருமான் பிரும்ம விஷ்ணுக்களுடன் மும்மூர்த்திகளாக உலாவரும் விழா எங்கு நடைபெறுகிறது?

41) தேரின் வடிவத்தில் அமையும் சித்திரக் கவி எது?

42) அவ்வகைக் கவிதை இயற்றிய மூவர் யாவர்?

43) தென்னகத் திரிவேணி எங்குள்ளது?

44) அங்குக் கூடும் ஆறுகள் எவை?

45) திருக்கோயில்களைச் சுத்தப்படுத்தும் துடைப்பத்தின் பெயர் என்ன?

46) திருக்கோளிலி என்ற தேவாரத் தலத்தின் தற்காலப் பெயர் என்ன?

47) தசாவதாரத்தில் பொதிந்துள்ள அறிவியல் கொள்கை எது?

48) 'சாவித்திரி' என்ற ஆங்கில நூலை இயற்றியவர் யார்?

49) ஊரின் எல்லைப்புறத்தில் காவல் தெய்வமாய் விளங்கும் ஐயனாரை சிலப்பதிகாரம் என்ன பெயரால் குறிப்பிடுகிறது?

50) அவர் மணந்த இரு தேவியர் யார்?

## விடைகள்

1) சுசீந்திரம்

2) திருவையாறு

3) சுப்பிரமணிய பாரதியார்

4) திருக்காளத்தி

5) காளி

6) கலி விடம்பனம்

7) குரோத பட்டாரகர்

8) காளிதாசன்

9) விசுவாமித்திரர்

10) மயிலாடுதுறை

11) பாம்பன் சுவாமிகள், பட்டினத்தார்

12) திருச்செங்கோடு

13) மேற்கு வங்கம்

14) ஆதிசங்கரரின் பரமகுரு

15) விஷ்ணு சகஸ்ரநாமம்

16) சுந்தரன்

17) ரத்னத்ரய பரிட்சை

18) அப்பைய தீட்சிதர்

19) பொருநை

20) சரசுவதியந்தாதி, சடகோபரந்தாதி

21) சாஸ்த்தா (அய்யனார்)

22) மார்க்கண்டேயர்

23) சரகம்

24) சகோதரி நிவேதிதை

25) பரஞானம், அபரஞானம்

26) ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியாத்மிகம்

27) இராசிச் சக்கரத்தில் உள்ளன.

28) நாமக்கல்

29) ஜயதேவர்

30) எட்வின் ஆருனால்ட்

31) தாருதத்

32) மாக்ஸ்முல்லர்

33) ஐன்ஸ்டீன்

34) கதாதரன்

35) சமயம் வளர்க்கும் பாதிரியார்

36) இராகவேந்திரர்

37) பிருந்தாவனம்

38) ஐஸ்ஹ்வுஸ்

39) பொன்னேரி

40) மயிலை வெள்ளீச்சரம்

41) திரு எழு கூற்றிருக்கை

42) திருஞான சம்பந்தர், திருமங்கை யாழ்வார், அருணகிரிநாதர்

43) பவானி

44) காவிரி, பவானி, அமுதநதி

45) திருவலகு

46) திருக்குவளை


47) டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை

48) அரவிந்தர்

49) புறம்பணையான்

50) பூரணை, புட்கலை.

★★★




திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் உலகமக்களின் நன்மையை முன்னிட்டு 24.10.99 அன்று அருட்செல்வர், தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்களின் முன்னிலையில் கோடிதீபம் ஏற்றும் துவக்கவிழா நடைபெற்றது. இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் முதல் விளக்கினை ஏற்றி வைத்து இவ்விழாவைத் துவக்கி வைத்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., திருக்கோயிலின் அறங் காவலர் குழுத்தலைவர், திருப்பணிச் செம்மல் திருமிகு டெக்கான் என்.கே. மூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்கள், திரளான பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.

பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் உலகமக்களின் நன்மையை முன்னிட்டு 24.10.99 அன்று அருட்செல்வர், தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்களின் முன்னிலையில் கோடிதீபம் ஏற்றும் துவக்கவிழா நடைபெற்றது. இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் முதல் விளக்கினை ஏற்றி வைத்து இவ்விழாவைத் துவக்கி வைத்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., திருக்கோயிலின் அறங் காவலர் குழுத்தலைவர், திருப்பணிச் செம்மல் திருமிகு டெக்கான் என்.கே. மூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்கள், திரளான பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.